**27.09.2024 வெள்ளிக்கிழமை**

**காலை 10.00 மணிக்கு**

**நடைபெற்ற சாதாரண**

**மன்றக்கூட்ட தீர்மானங்கள்**

**க.து.ந.க.எண்.பி1 / 2114 / 2024**

**ஆணையர் அவர்களின் 18.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:320 / 2024** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் – 5, கோட்டம் – 58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள பழைய 7 கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் கீழ்கண்ட விவரப்படி உள்ள பழைய 7 கட்டிடங்கள் உள்ளது. அக்கட்டிடங்களின் மொத்த பரப்பளவு 37,209 சதுர அடி. இந்த கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தில் புதியதாக மன்றக்கட்டிடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இதனை இடிப்பதற்கு நிலைக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | பொருள் | கட்டடங்களின் விவரம் | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் மொத்த பரப்பளவு | கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 01. | இடிக்கப்பட்ட வேண்டிய கட்டிடங்களின் விவரம் | அலுவலர்கள் உணவருந்தும் கூடம் (G+2) | 9301 ச.அடி | 1981 |
| | | மாவட்ட குடும்ப நல தாய்சேய் நலத் திட்ட தலைமை அலுவலக கட்டிடம் (G+2) | 13800 | 1991 |
| | | சென்னை மாவட்ட அலுவலர்கள் கூட்டுறவு சங்க கட்டிடம் (G+2) | 11280 | 1997 |
| | | மாநகராட்சி அலுவலர்கள் சங்கம் (A.C. Roof - G Floor only) தரை தளம் மட்டும் | 850 | 1981 |
| 02. | | (i)சென்னை மாநகராட்சி ஊழியர் உதவி நிதி (ii) சென்னை மாநகராட்சி உடன் நிகழ்வு நிதி (iii) பெருநகர சென்னை மாநகராட்சி ஊர்தி ஓட்டுநர் சங்கம் | 962 ச.அடி | 1981 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | *(iv)* பெருநகர சென்னை மாநகராட்சி கடை நிலை ஊழியர் (ம) பாடசாலை<br>*(V)* சென்னை மாநகராட்சி ஓய்வூதியர் அறநிலை | | |
| *03* | | *(i)* சென்னை மாநகராட்சி அனைத்து சங்க கூட்டமைப்பு<br>*(ii)* சென்னை மாநகராட்சி செங்கொடி சங்க கட்டிடம் (தரை தளம் ) | 512 ச.அடி | *1981* |
| | | கழிவறை கட்டிடம் (தரை தளம் ) | 504 ச.அடி | *1981* |
| | | இடிக்கப்பட வேண்டிய மேற்கண்ட கட்டடங்களின் மொத்த பரப்பளவு | 37209 ச.அடி | |
| *04* | கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு | பரப்பளவு 25080 சதுர அடி | | |
| *05* | மூன்று கட்டிடங்களின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.*1,00,000/-* | | |
| *06* | கட்டிடங்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளதா? | அனைத்து கட்டிடங்களும் பயன்பாட்டில் உள்ளது. | | |
| *07* | அந்த கட்டிடங்கள் இடிக்கப்பட்ட பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன் பாட்டிற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளது. | மாமன்றக் கட்டிடம் கட்டும் பணிக்காக | | |
| *08* | கட்டடங்களை இடிப்பதற்கான காரணம் | மேற்கண்ட கட்டிடங்கள் பழமையான நிலையில் உள்ளது. | | |
| *09* | கட்டிடங்களை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு | | |

எனவே, மண்டலம் – 5, கோட்டம் – 58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள பழைய 7 கட்டிடங்களை (மொத்த பரப்பளவு - 37,209 ச.அடி) இடித்து அகற்றுவதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.86/2024, நாள். 20.09.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.12.ந.க.எண்.இ1 / 4621-08 / 2024**

**ஆணையர் அவர்களின் 18.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:321 / 2024** **பொருள் எண்.02**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12, வார்டு -156, முகலிவாக்கம், பாடசாலை தெருவில் அமைந்துள்ள பழைய UPHC கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12, வார்டு -156 முகலிவாக்கம், பாடசாலை தெருவில் அமைந்துள்ள *UPHC* கட்டிடம் 1980 ஆம் ஆண்டு ஊராட்சியால் கட்டப்பட்டதாக தெரியவருகிறது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற கோரி 09.08.2024 அன்று நடைபெற்ற 12வதுமண்டல வார்டு குழுவில் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற தீர்மான எண்.764, ஆக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய பழைய *UPHC* கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வார்டு எண். | *156* |
| இடம் | முகலிவாக்கம், பாடசாலை தெரு |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | *1980* ஆம் ஆண்டு |
| கட்டிடத்தின் பரப்பளவு | 288.20ச.மீ |
| கட்டிடம்அமைந்துள்ளஇடத்தின்மொத்தபரப்பளவு | 390ச.மீ |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ311836.32 |
| தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | *UPHC* கட்டிடம் கட்டப்படஉள்ளது. |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளது |
| வார்டு குழு தீர்மான எண். | தீர்மான எண் 764 நாள். 09.08.2024 |

எனவே, மண்டலம் *12*, வார்டு *-156* முகலிவாக்கம், பாடசாலை தெருவில் அமைந்துள்ள பழைய *UPHC* கட்டடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.92/2024, நாள். 20.09.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.12ந.க.எண்.இ1/5344/04/2024**

**ஆணையர் அவர்களின் 18.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:322/2024** **பொருள் எண்.03**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-12, வார்டு-164 நியூகாலனி முதல் குறுக்கு தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள பழைய UPHC கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு-164 நியூகாலனி முதல் குறுக்கு தெருவில் அமைந்துள்ள பழைய *UPHC* கட்டிடம் 1987 ஆம் ஆண்டு ஆலந்தூர் நகராட்சியால் கட்டப்பட்டதாக தெரியவருகிறது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற கோரி 13.*09*.2024 அன்று நடைபெற்ற 12 வது மண்டல வார்டு குழுவில் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற தீர்மானம் எண்.797 ஆக நிறைவேற்றப்பட்டுள்ளது

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய பழைய *UPHC* கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வார்டு எண். | *164* |
| இடம் | நியூகாலனி முதல் குறுக்கு தெரு |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | *1987*ஆம் ஆண்டு |
| கட்டிடத்தின் பரப்பளவு | 1060.56 ச.மீ |
| கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 1936.31 ச.மீ |
| தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு | ரூ.243143.07 |
| தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | பழுதடைந்த நிலையில் உள்ளது |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | *UPHC* கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| வார்டு குழு தீர்மான எண். | தீர்மான எண். 797 நாள். *13.09.2024* |

எனவே, மண்டலம்-*12*, வார்டு-*164* நியூகாலனி முதல் குறுக்கு தெருவில் அமைந்துள்ள பழைய *UPHC* கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "20.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.91/2024, நாள்.20.09.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பா.து.ந.க.எண்.பி3 / 1275 / 2011**

**ஆணையர் அவர்களின் 24.08.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:323 / 2024** **பொருள் எண்.04**

**பெருநகர சென்னை மாநகராட்சி- பாலங்கள் துறை - மண்டலம்-12, வார்டு-161ல், ஏ.ஜெ.எஸ் நிதி மேல்நிலைப்பள்ளி அருகில் மூடப்பட்ட இரயில்வே சந்திக்கடவு எண்.15ல் இரயில்வே இருப்புப்பாதையின் குறுக்கே இரயில்வே துறையால் நடை மேம்பாலம் அமைக்கும் பணி - இரயில்வே துறையிடமிருந்து ரூ.2,99,59,878/-க்கு திருத்திய மதிப்பீடு பெறப்பட்டது - இரயில்வே துறைக்கு ரூ.2,81,57,500/- செலுத்துவதற்கு அனுமதி.**

மண்டலம்-12, வார்டு-161ல், ஏ.ஜெ.எஸ் நிதி மேல்நிலைப்பள்ளி அருகில் மூடப்பட்ட இரயில்வே சந்திக்கடவு எண்.15ல் இரயில்வே இருப்புப்பாதை குறுக்கே பாதசாரிகள் சுரங்கப்பாதை இரயில்வே துறை மூலம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. மேலும், இரயில்வே துறை கேட்டுக் கொண்டதற்கிணங்க மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,90,58,700/-ஐ வைப்புத் தொகையாக இரயில்வே துறைக்கு செலுத்தபட்டது.

சுரங்கப்பாதை வழித்தடத்தில் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தின் குடிநீர் மற்றும் கழிவுநீர் பிரதான குழாய்கள் மிகவும் ஆழத்தில் செல்வதாலும், இக்குழாய்களை மாற்றியமைக்க இயலாது என்பதாலும், அவ்விடத்தில் சுரங்கப்பாதை அமைப்பதற்கான திட்டம் கைவிடப்பட்டது.

நலச்சங்கங்களின் கோரிக்கைகளுக்கிணங்க பள்ளி குழந்தைகள் எளிதாக இரயில்வே தண்டவாளங்களை கடப்பதற்கு ஏதுவாக இவ்விடத்தில் படிக்கட்டுகளுடன் கூடிய பாதசாரிகள் நடைமேம்பாலம் அமைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி இரயில்வே துறையை 04.07.2017 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொண்டது.

நடைமேம்பாலத்திற்கான பொது சீரமைப்பு வரைபடம் *(General Arrangement Drawing)* இரயில்வே துறையால் தயாரிக்கப்பட்டு, அப்போது சீரமைப்பு வரைபடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் 09.03.2018 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது.

இரயில்வே துறையால் நடைமேம்பாலம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பம் இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்ட போது சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தின் குடிநீர் மற்றும் கழிவுநீர் பிரதான குழாய்கள் *(CMWSSB)* அருகில் நடைமேம்பாலத் தூண்களுக்கான அஸ்திவாரம் *(Foundation*) அமைப்பதற்கு *CMWSSB* ஆட்சேபம் தெரிவித்தது. எனவே, இரயில்வே துறையால் பொது சீரமைப்பு வரைபடத்தில் மாற்றம் செய்யப்பட்டது. மறு பொது சீரமைப்பு வரைபடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் 09.05.2019 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது.

31.01.2020 அன்று இரயில்வே துறை, *CMWSSB* மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுடன் இணைந்து நடைமேம்பாலத்தின் அடித்தளத்தை இறுதி செய்ய கூட்டு கள ஆய்வு நடத்தப்பட்டது. கள ஆய்வில் *CMWSSB* அதிகாரிகள் நடைமேம்பாலத்தின் வடக்குப் பகுதியில் 300 மிமீ விட்டமுள்ளகுழாயை மாற்றியமைக்க ஒப்புக்கொண்டனர்.

இப்பணி துவங்க காலதாமதம் ஏற்பட்டதால், இப்பணிக்காக இரயில்வே துறைக்கு செலுத்தப்பட்ட ரூ.2,90,58,700/-ல் ரூ.2,72,56,322/-யை மற்றொரு சுரங்கப்பாதை பணியான மண்டலம்-5, வார்டு-53ல் போஜராஜ நகர், இரயில்வே சந்திக்கடவு எண்,11-ஏ-ன் குறுக்கே வரையறுக்கப்பட்ட வாகனச் சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு நேர் செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சுரங்கப்பாதை பணிக்கு நேர் செய்யப்பட்ட தொகையான ரூ.2,72,56,322/- போக மீதத் தொகை ரூ.18,02,378/- இரயில்வே துறையின் இருப்பில் உள்ளது.

முதுநிலை கோட்ட பொறியாளர், இரயில்வே துறை அவர்களின் 14.09.2021 நாளிட்ட கடிதத்தில் இரயில்வே துறையின் மறு பொது சீரமைப்பு வரைபடத்தின்படி, ஏ.ஜெ.எஸ் நிதி மேல்நிலைப்பள்ளி அருகில் மூடப்பட்ட இரயில்வே சந்திக்கடவு எண்.15ல் நடை மேம்பாலம் அமைப்பதற்கு ரூ.2,85,10,538/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இரயில்வே துறை வசம் மீதமுள்ள தொகையான ரூ.18,02,378/- போக ரூ.2,67,08,160/-ஐ (ரூ.2,85,10,538 - ரூ.18,02,378) இரயில்வே துறைக்கு செலுத்துமாறு கோரியுள்ளார்.

மாண்புமிகு திரு.தா.மோ.அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான *(MS&ME)* அமைச்சர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1.00 கோடி வழங்க 29.11.2023 அன்று இசைவு தெரிவித்துள்ளதை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர், *DRDA* காஞ்சிபுரம் அவர்களின் 05.09.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக ரூ.1.00 கோடி வழங்க நிதி ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக விரைவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுப்புமாறு 05.10.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக இரயில்வே துறையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு திரு.தா.மோ.அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான *(MS&ME)* அமைச்சர் அவர்களிடமிருந்து தொகுதி மேம்பாட்டு நிதி ரூ. 1.00 கோடி போக மீதமுள்ள தொகையை இரயில்வே துறைக்கு செலுத்தி நடைமேம்பாலப் பணியை விரைவில் துவங்குமாறு 29.11.2023 நினைவூட்டு கடிதம் பெறப்பட்டுள்ளது.

27.12.2023 மற்றும் 09.05.2024 அன்று திருத்திய மதிப்பீட்டை விரைவில் வழங்குமாறு இரயில்வே துறைக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், இரயில்வே துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறையுடன் நடத்தும் ஒவ்வொரு ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் கோரப்பட்டது.

முதுநிலை கோட்ட பொறியாளர்(தெற்கு), இரயில்வே துறை அவர்களின் 23.08.2024 நாளிட்ட கடிதத்தில், இரயில்வே துறையின் மறு பொது சீரமைப்பு வரைபடத்தின்படி, ஏ.ஜெ.எஸ் நிதி மேல்நிலைப்பள்ளி அருகில் மூடப்பட்ட இரயில்வே சந்திக்கடவு எண்.15ல் நடை மேம்பாலம் அமைப்பதற்கு திருத்திய மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,99,58,878/-ஐ இரயில்வே துறைக்கு செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

இரயில்வே துறை கோரியதற்கிணங்க, இரயில்வே துறையிடம் ஏற்கனவே இருப்பில் உள்ள ரூ.18,02,378/- கழித்தது போக மீதமுள்ள ரூ.2,81,57,500/-ஐ (ரூ.2,99,59,878 – *18,02,378)* இரயில்வே துறைக்கு செலுத்தப்பட வேண்டும்.

இரயில்வே துறைக்கு செலுத்த வேண்டிய வைப்பு நிதி ரூ.2,81,57,500/-ல் ரூ.1.00 கோடியை *MLA CDS* நிதியிலிருந்தும், ரூ.1,81,57,500/-ஐ பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியிலிருந்தும் இப்பணியை மேற்கொள்ளலாமென கருதப்படுகிறது.

எனவே,

1. ஏ.ஜெ.எஸ் நிதி மேல்நிலைப்பள்ளி அருகில் மூடப்பட்ட இரயில்வே சந்திக்கடவு எண்.15ல் இரயில்வே இருப்புப்பாதையின் குறுக்கே நடை மேம்பாலம் அமைப்பதற்கு திருத்திய மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,99,59,878/-ஐ ஏற்றுக் கொள்ளவும்,
2. ரூ.1.00 கோடியை *MLA CDS* நிதியிலிருந்தும், மீதத் தொகை ரூ.1,81,57,500/-யை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியிலிருந்தும் பெற்று இரயில்வே துறைக்கு செலுத்தவும்,
3. ஏ.ஜெ.எஸ் நிதி மேல்நிலைப்பள்ளி அருகில் மூடப்பட்ட இரயில்வே சந்திக்கடவு எண்.15ல் இரயில்வே இருப்புப்பாதையின் குறுக்கே நடை மேம்பாலம் அமைப்பதற்கான தொகை ரூ.2,81,57,500/-ஐ "*The Senior Divisional Finance Manager, Chennai Division, Southern Railway*"பெயரில் செலுத்தவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.79/2024, நாள். 20.09.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**பா.து.ந.க.எண்.பி3 / 0766 / 2024**

**ஆணையர் அவர்களின் 22.08.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:324 / 2024** **பொருள் எண்.05**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை - மண்டலம்-8, வார்டு-106 கண்ணகி தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி.**

கீழ்க்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 01 | பணியின் பெயர் | : | மண்டலம்-8, வார்டு-106 கண்ணகி தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கும் பணி. |
| 02 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பாலங்கள் துறை |
| 03 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | ஆம் |
| 04 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | : | தலைமை பொறியாளர் / பாலங்கள், எண்.2./2024 நாள்.19.08.2024 |
| 05 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2023-24 |
| 06 | மதிப்பீட்டின் தொகை | | |
| | (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ.1,26,71,658.59 |
| | (ஆ) பொருட்கள் மற்றும் சேவை வரி - 18% | : | ரூ. 22,80,898.55 |
| | (இ) தரக்கட்டுப்பாடு – 1% | : | ரூ. 1,26,716.59 |
| | (ஈ) எதிர்பாரா செலவினம் – 2.5% | : | ரூ. 3,22,567.90 |
| | (உ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி - 1% | : | ரூ. 1,26,716.59 |
| | (ஊ) மின்விளக்குகள் ஏற்பாட்டிற்கான செலவினம் | : | ரூ. 9,25,000.00 |
| | (எ) தளவாடங்களை மாற்றியமைப்பதற்கான செலவினம் | : | ரூ. 9,25,000.00 |
| | (ஏ) மீள்குடியேற்றம் (ம) மறுவாழ்வு செலவினம் | : | ரூ. 40,00,000.00 |
| | (ஒ) 1.5 ஆண்டிற்கு விலையேற்றம் @ 7.5% | : | ரூ. 9,50,374.39 |
| | (ஓ) விலையேற்றத்திற்கான பொருட்கள் மற்றும் சேவை வரி - 18% | : | ரூ. 1,71,067.39 |
| | மொத்தம் | : | **ரூ. 2,25,00,000.00** |

| | | | |
|---|---|---|---|
| 07 | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | ---------- |
| 08 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | : | இல்லை |
| 09 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | : | ----------- |
| 10 | நிதியின் தன்மை | : | மூலதன நிதி |
| | (அ)வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2023-24 | : | ------- |
| | (ஆ)மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | : | -------- |
| | (இ)மீதம் உள்ள நிதி (அ-ஆ) | : | -------- |
| | (ஈ)இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | **ரூ.2,25,00,000/-** |

எனவே, மண்டலம்-8, வார்டு-106 கண்ணகி தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கும் பணிக்கு 2023-24ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,25,00,000/-க்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்காக நிலைக்குழு (பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.80/2024, நாள்.20.09.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**பா.து.ந.க.எண்.பி3 / 0765 / 2024**

**ஆணையர் அவர்களின் 22.08.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண் : 325 / 2024** **பொருள் எண்.06**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை – மண்டலம்-8, வார்டு-106 இந்திரா காந்தி 2வது தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி.**

கீழ்க்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 01 | பணியின் பெயர் | : | மண்டலம்-8, வார்டு-106ல் இந்திரா காந்தி 2வது தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கும் பணி. |
| 02 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பாலங்கள் துறை |
| 03 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | ஆம் |
| 04 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | : | தலைமை பொறியாளர் / பாலங்கள், எண்.1/2024, நாள்.19.08.2024 |
| 05 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2023-24ஆம் ஆண்டு. |
| 06 | மதிப்பீட்டின் தொகை | | |
| | (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ.1,12,16,270.21 |
| | (ஆ) பொருட்கள் மற்றும் சேவை வரி - 18% | : | ரூ. 20,18,928.64 |
| | (இ) தரக்கட்டுப்பாடு – 1% | : | ரூ. 1,12,162.70 |
| | (ஈ) எதிர்பாரா செலவினம் – 2.5% | : | ரூ. 2,87,835.84 |
| | (உ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி - 1% | : | ரூ. 1,12,162.70 |
| | (ஊ) மின்விளக்குகள் ஏற்பாட்டிற்கான செலவினம் | : | ரூ. 17,30,000.00 |
| | '(எ) தளவாடங்களை மாற்றியமைப்பதற்கான செலவினம் | : | ரூ. 17,30,000.00 |
| | (ஏ) மீள்குடியேற்றம் (ம) மறுவாழ்வு செலவினம் | : | ரூ. 50,00,000.00 |
| | (ஒ) 1.5 ஆண்டிற்கு விலையேற்றம் @ 7.5% | : | ரூ. 8,41,220.27 |
| | (ஓ) விலையேற்றத்திற்கான பொருட்கள் மற்றும் சேவை வரி - 18% | : | ரூ. 1,51,419.65 |
| | மொத்தம் | : | ரூ.2,32,00,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 07 | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | --------- |
| 08 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | : | இல்லை |
| 09 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | : | ---------- |
| 10 | நிதியின் தன்மை | : | மூலதன நிதி |
| | (அ)வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2023-24 | : | --------- |
| | (ஆ)மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | : | -------- |
| | (இ)மீதம் உள்ள நிதி (அ-ஆ) | : | ------- |
| | (ஈ)இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ.2,32,00,000/- |

எனவே, மண்டலம்-8, வார்டு-106 இந்திரா காந்தி 2வது தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கும் பணிக்கு 2023-24ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,32,00,000/-க்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்காக நிலைக்குழு (பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.81/2024, நாள். 20.09.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.5ந.க.எண்.இ1 / 6273 / 2024**

**ஆணையர் அவர்களின் 11.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:326 / 2024** **பொருள் எண்.07**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-05, வார்டு-54 , அம்மன் கோவில் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கட்டிடம் கட்டும் பணிக்கு 2023-24 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,97,50,000 / -க்கு நிர்வாக அனுமதி - கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும் மற்றும் ஒப்பம் கோருவதற்கும் அனுமதி.**

பணியின் பெயர்

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | பணியின் தொகை | மதிப்பீட்டு தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | 54 | மண்டலம்-05, பகுதி-13, வார்டு-54க்கு உட்பட்ட அம்மன் கோவில் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கட்டிடம் கட்டும் பணி | 2,42,88,394.91 | 2,97,50,000.00 |

| | | |
|---|---|---|
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் துறைமுக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள். |
| 3 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம் - 5 |
| 4 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | மண்டலம் - 5 |
| 5 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி | தலைமை பொறியாளர் (பொது), அவர்களின் செயல்முறை ஆணை எண். 07 நாள்.30.08.2024 |
| 6 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2023-2024 (வடக்கு மண்டலம்) |
| 7 | மதிப்பீட்டின் தொகை | |
| | அ) பணியின் செலவினம் மட்டும் | ரூ. 2,42,88,394.91 |
| | ஆ) மேலானமேற்பார்வை செலவினம் 10.0% | ரூ. ------- |
| | இ) சிறு மேற்பார்வை செலவு 2.50% | ரூ. ------- |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு 1.0% | ரூ. 2,42,883.95 |
| | உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி 1% | ரூ. 2,42,883.95 |
| | ஊ) ஜி.எஸ்.டி வரி 18% | ரூ. 43,71,911.08 |
| | எ) மற்ற எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 6,03,926.11 |
| | மொத்தம் | ரூ. 2,97,50,000.00 |

| | | |
|---|---|---|
| 8. | மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | பொருந்தாது |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | ரூ.29,572/- சதுர மீட்டர் |
| 10. | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 11. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதியதாக அமைக்கப்படும் |
| 12. | நிதியின் மூலத்தன்மை | மூலதன நிதி |
| | பிரிவு கணக்கு எண் | |
| | அ) 2023-2024 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடு | ரூ.------ |
| | ஆ)மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ.------- |
| | இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) | ரூ. ------- |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.2,97,50,000.00 |

எனவே, மண்டலம்-05, பகுதி-13, வார்டு-54க்கு உட்பட்ட அம்மன் கோவில் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கட்டிடம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2,97,50,000/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடு செய்யவும் மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கும், நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.87/2024, நாள். 20.09.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.4ந.க.எண்.பி3 / 10138 / 2024**

**ஆணையர் அவர்களின் 14.08.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:327 / 2024** **பொருள் எண்.08**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 4, வார்டு-42, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகதார மைய கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, பகுதி-10, வார்டு-42ல் நகர்புற ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மண்டலம்-4 | வார்டு எண். 42 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் |
| 2. | அந்த பழைய கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1963 ஆம் ஆண்டு |
| 3. | அந்த பழைய கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் 153.45ச.மீ மற்றும் முதல் தளம் 153.45ச.மீ |
| 4. | பழைய கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.26,874.09/- |
| 5. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் |
| 6. | பழைய கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| 7. | அந்த பழைய கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | நகர்புற ஆரம்ப சுகதார மையம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | பழைய நகர்புற ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது | மண்டல அலுவலர்-4 |
| 9. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம) நாள்: | 18 /2023, நாள்.14.11.2023 |

மேலே குறிப்பிட்டுள்ள பகுதி-10, வார்டு-42, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-4, பகுதி-10, வார்டு-42, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள பழுதடைந்த நகர்புற ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.90/2024, நாள்.20.09.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN03/00658/2024**
**ஆணையர் அவர்களின் 14.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:328/2024** **பொருள் எண்.09**

**தானப்பத்திரம்**

மண்டலம்-03, கோட்டம்-29ல் Keela Eral Kammavar Arakkattalai, a public charitable Trust constituted by the Deed of Trust represented by its President Mr.V.Srinivasan அவர்கள் T.S.No.71 (Old S.No.1179/part), Ward:D, Block No.0101, Madhavaram Village, Madhavaram Taluk, Chennai Districtல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN03/00658/2024, நாள்:30.08.2024ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்: 09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் Keela Eral Kammavar Arakkattalai, a public charitable Trust constituted by the Deed of Trust represented by its President Mr.V.Srinivasan அவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) Keela Eral Kammavar Arakkattalai, a public charitable Trust constituted by the Deed of Trust represented by its President Mr.V.Srinivasan என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 2049.49 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 565.13 சதுர மீட்டர் நிலம், TANGEDCOவிற்கு 18.77 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 9.36 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) Keela Eral Kammavar Arakkattalai, a public charitable Trust constituted by the Deed of Trust represented by its President Mr.V.Srinivasan என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, தனி வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 3,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு விண்ணப்பதாரர் அளிக்க வேண்டியதில்லை. மனைப்பிரிவு 3,000சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு அளிக்க வேண்டிய நிலை எழவில்லை.

(ஈ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00 ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின்படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Keela Eral Kammavar Arakkattalai, a public charitable Trust constituted by the Deed of Trust represented by its President Mr. V. Srinivasan அவர்கள் அதற்கேற்றவாறு 9.36ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 18.77 ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கு ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Keela Eral Kammavar Arakkattalai, a public charitable Trust constituted by the Deed of Trust represented by its PresidentMr.V.Srinivasan அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென 565.13 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 9.36 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated 16.07.2022ன்படி, சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளரே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர் தாங்களே சாலை மற்றும் தெருவிளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்.

(ஏ) அபிவிருத்தியாளர் தங்களின் கடிதத்தில், சாலை போடும் பணி முடியும் தருவாயில் உள்ளதாகவும் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் Keela Eral Kammavar Arakkattalai, a public charitable Trust constituted by the Deed of Trust represented by its President Mr.V.Srinivasan அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) T.S.No.71 (Old S.No.1179/part), Ward:D, Block No.0101, Madhavaram Village, Madhavaram Taluk, Chennai District, Division - 029, Zone - 03 ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 565.13சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 9.36சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை Keela Eral Kammavar Arakkattalai, a public charitable Trust constituted by the Deed of Trust represented by its President Mr.V.Srinivasan அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர் / அபிவிருத்தியாளர் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.54/2024, நாள்.23.09.2024ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.டி1/0020/2024**
**ஆணையர் அவர்களின் 14.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:329 / 2024** **பொருள் எண்.10**

**தானப்பத்திரம்**

மண்டலம்-06, கோட்டம்-71ல் Mr.M.Prabhu அவர்கள் New Door No.111, Old Door No.87, Perambur High Road, Chennai - 600011 comprised in Old R.S.No.446/7, New R.S.No.446/35, Block No.24 of Perambur Village Part - 3ல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/06245/2024, நாள்:06.07.2024ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 245.50 ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 15.50மீ அகல Perambur High Road அமையபெற்றுள்ளது. Perambur High Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 25.90ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. M. Prabhu அவர்கள் New Door No.111, Old Door No.87, Perambur High Road, Chennai - 600011 comprised in Old R.S.No.446/7, New R.S.No.446/35, Block No.24 of Perambur Village Part - 3, Division-71, Zone - 06ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 25.90ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.55/2024, நாள்.23.09.2024ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**<u>ந.துநக.எண். D1/03081/2024</u>**

**<u>ஆணையர் அவர்களின் 11.09.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:330/2024** **பொருள் எண்.11**

**<u>தானப்பத்திரம்</u>**

மண்டலம்-06, கோட்டம்-75ல் Mrs.Hemalatha Pushpakaran அவர்கள் Door No.4/4, New Door No.52 (102/A), Medavakkam Tank Road, Kilpauk, Chennai - 600010 comprised in R.S.No.3169 (part), as per patta R.S.No.3169/31, Block No.55 of Purasawalkam Village, Purasawalkam Talukல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/06919/2024, நாள்:24.07.2024ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 224.35 ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 18.29 மீ அகல Medavakkam Tank Road அமையபெற்றுள்ளது. Medavakkam Tank Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 24.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 30.85 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mrs. Hemalatha Pushpakaran அவர்கள் Door No.4/4, New Door No.52 (102/A), Medavakkam Tank Road, Kilpauk, Chennai - 600010 comprised in R.S.No.3169 (part), as per patta R.S.No.3169/31, Block No.55 of Purasawalkam Village, Purasawalkam Taluk, Division-75, Zone-06ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 30.85 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.56/2024, நாள்.23.09.2024ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நதுநக.எண்.D1/021/2024**

**ஆணையர் அவர்களின் 14.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:331/2024** **பொருள் எண்.12**

**தானப்பத்திரம்**

மண்டலம்-06, கோட்டம்-75ல் Mr. R. Navin Krishnan அவர்கள் Old Door No.67, New Door No.153 part, Medavakkam Tank Road, Kilpauk, Chennai - 600010 comprised in as per patta R.S.No.3180/248, Block No.55 of Purasaiwakkam Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/07993/2024, நாள்:30.08.2024ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 125.00ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 23.70மீ அகல Medavakkam Tank Road அமையபெற்றுள்ளது. Medavakkam Tank Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 24.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 1.71 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr.R.Navin Krishnan அவர்கள் Old Door No.67, New Door No.153 part, Medavakkam Tank Road, Kilpauk, Chennai - 600010 comprised in as per patta R.S.No.3180/248, Block No.55 of Purasaiwakkam Village, Division-75, Zone-06ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 1.71 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.57/2024, நாள்.23.09.2024ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN07/00621/2024**

**ஆணையர் அவர்களின் 13.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:332 / 2024** **பொருள் எண்.13**

## தானப்பத்திரம்

மண்டலம்-07, கோட்டம்-83ல் (1) Mr. Rejilal Thomas Jacob Alias Thomas Jacob (2) Mrs. Anila Jacob (3) Mr. Ashwin Thomas Jacob and (4) Mr. Aakash Jacob represented by their Power of Attorney M/s. Cobblestone, represented by its Managing Partner Mr.V.Sathish அவர்கள் Plot Nos. 63-A, 63-B, 63-C and 63-D, "T.V.S. Nagar Annexe", 2nd Cross Street, Chennai 600 076., Comprised in Old Survey No. 441/1, Present T.S. No. 108, Block 25, Korattur Ward E,- Korattur Village, Ambattur Taluk, Chennai Districtல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN07/ 00621/2024, நாள்:14.08.2024ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்: 09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் (1) Mr. Rejilal Thomas Jacob Alias Thomas Jacob (2) Mrs. Anila Jacob (3) Mr. Ashwin Thomas Jacob and (4) Mr. Aakash Jacob represented by their Power of Attorney M/s. Cobblestone, represented by its Managing Partner Mr.V.Sathish என்பவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) (1) Mr. Rejilal Thomas Jacob Alias Thomas Jacob (2) Mrs. Anila Jacob (3) Mr. Ashwin Thomas Jacob and (4) Mr. Aakash Jacob represented by their Power of Attorney M/s. Cobblestone, represented by its Managing Partner Mr. V. Sathish என்பவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1900.00சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 428.50 சதுர மீட்டர் நிலம், TANGEDCOவிற்கு 11.64சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 15.00 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) (1) Mr. Rejilal Thomas Jacob Alias Thomas Jacob (2) Mrs. Anila Jacob (3) Mr. Ashwin Thomas Jacob and (4) Mr. Aakash Jacob represented by their Power of Attorney M/s. Cobblestone, represented by its Managing Partner Mr.V.Sathish என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவர்களாக அறியப்படுகிறார்கள். மனை உரிமையாளர்கள்

பட்டாவினை, மண்டல துணை வட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.2மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின்படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கு மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) Mr. Rejilal Thomas Jacob Alias Thomas Jacob (2) Mrs. Anila Jacob (3) Mr. Ashwin Thomas Jacob and (4) Mr. Aakash Jacob represented by their Power of Attorney M/s. Cobblestone, represented by its Managing Partner Mr.V.Sathish அவர்கள் அதற்கேற்றவாறு 15.00ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 11.64ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 3,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு விண்ணப்பதாரர் அளிக்க வேண்டியதில்லை. மனைப்பிரிவு 3,000 சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு அளிக்க வேண்டிய நிலை எழவில்லை.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் (1) Mr. Rejilal Thomas Jacob Alias Thomas Jacob (2) Mrs. Anila Jacob (3) Mr. Ashwin Thomas Jacob and (4) Mr. Aakash Jacob represented by their Power of Attorney M/s. Cobblestone, represented by its Managing Partner Mr.V.Sathish என்பவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கான 428.50சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 15.00 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated 16.07.2022ன்படி சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர் தாங்களே சாலை மற்றும் தெருவிளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்கள்.

(ஏ) அபிவிருத்தியாளர்கள் தங்களின் கோரிக்கை கடிதத்தில் சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணி 15 நாட்களுக்குள் முடிக்கப்படும் என தெரிவித்துள்ளனர். ஆகவே ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் (1) Mr. Rejilal Thomas Jacob Alias Thomas Jacob (2) Mrs. Anila Jacob (3) Mr. Ashwin Thomas Jacob and (4) Mr. Aakash Jacob represented by their Power of Attorney M/s. Cobblestone, represented by its Managing Partner Mr.V.Sathish அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) Plot Nos. 63-A, 63-B, 63-C and 63-D, "T.V.S. Nagar Annexe", 2nd Cross Street, Chennai 600 076., Comprised in Old Survey No. 441/1, Present T.S. No. 108, Block 25, Korattur Ward E,- Korattur Village, Ambattur Taluk, Chennai District, Division-83, Zone-7ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 428.50 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 15.00 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை (1) Mr. Rejilal Thomas Jacob Alias Thomas Jacob (2) Mrs. Anila Jacob (3) Mr. Ashwin Thomas Jacob and (4) Mr. Aakash Jacob represented by their Power of Attorney M/s. Cobblestone, represented by its Managing Partner Mr.V.Sathish அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்கள்/ அபிவிருத்தியாளர்கள் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.58/2024, நாள்.23.09.2024ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நதுநக.எண்டி1/0019/2024**

**ஆணையர் அவர்களின் 13.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:333/2024** **பொருள் எண்.14**

**தானப்பத்திரம்**

மண்டலம்-09, கோட்டம்-121ல் Mrs. K. Nirmala and Mr. M. Navarathan அவர்கள் Door No.122, Dr. Radhakrishnan Road and Dr. Natesan Road, Mylapore, Chennai - 600004 comprised in R.S.No.1071/8, Block No.22 of Mylapore Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN09/06529/2024, நாள்:11.07.2024ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-09ல் விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 241.00ச.மீ ஆகும். விண்ணப்பதாரர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 23.50மீ அகல Dr. Radhakrishnan Road மற்றும் 12.80மீ அகல சாலையாக Dr.Natesan Road அமையபெற்றுள்ளது. Dr. Radhakrishnan Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 30.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் Dr. Natesan Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய Item No.1- 51.58 sq.m on Dr.Radhakrishnan Road and Item No.2- 18.23 sq.m on Dr.Natesan Road சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 69.81ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் Mrs. K. Nirmala and Mr. M. Navarathan அவர்கள் Door No.122, Dr. Radhakrishnan Road and Dr. Natesan Road, Mylapore, Chennai - 600004 comprised in R.S.No.1071/8, Block No.22 of Mylapore Village, Division - 121, Zone -09ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய Item No.1-51.58sq.m on Dr.Radhakrishnan Road and Item No.2 - 18.23 sq.m on Dr.Natesan Road சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 69.81ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.59/2024, நாள்.23.09.2024ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.டி1/03083/2024**

**ஆணையர் அவர்களின் 11.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:334/2024** **பொருள் எண்.15**

**தானப்பத்திரம்**

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களை கொண்டு கொசுப் புழு தடுப்புப் பணி, மருந்து தெளிக்கும் பணி, புகை மருந்து பரப்பும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்யுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-3ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின், 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் 123 எண்ணிக்கையிலான (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ.753 X 123 (பணியாளர்கள்) X 365 (நாட்கள்) என ஓர் ஆண்டிற்கு ரூ.3,38,05,935/- (ரூபாய் மூன்று கோடியே முப்பத்து எட்டு இலட்சத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஐந்து மட்டும்) என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட 123 எண்ணிக்கையிலான (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களை சுகாதார கள பணியில் ஈடுபடுத்த,

1. அண்டை வீட்டு குழு (SHG) பணியாளர்களின் பணிக்காலம் 26.09.2024 அன்றுடன் முடிவடையவுள்ளதால் 27.09.2024 முதல் 26.09.2025 வரை ஓராண்டு காலத்திற்கு (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களை சுகாதார கள பணியில் ஈடுபடுத்தவும்,

2. சுகாதார களப்பணி (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு 29.07.2024 நாளிட்ட ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின் அடிப்படையில் தினக்கூலி ரூ.753/- வீதம் 123 குழு உறுப்பினர்களுக்கு 365 நாட்களுக்கு வழங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.753 X 123 X 365 = ரூ.3,38,05,935/- (ரூபாய். மூன்று கோடியே முப்பத்து எட்டு இலட்சத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஐந்து மட்டும்) வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,

3. அண்டை வீட்டு குழு (SHG) உறுப்பினர்கள் சுகாதார கள பணியில் ஈடுபட்டு வரும் நிலையில் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினரை பணியிலிருந்து நீக்கி மாற்று பணியாளரை மண்டல அலுவலர்-3 அவர்களின் அனுமதியுடன் சேர்க்கவும்.

4. சுகாதார கள பணியில் ஈடுபடும் (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள் பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர்-3 அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு குழு உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கவும்,

5. இப்பணிக்கான செலவீன தொகையை கணக்கு தலைப்பு எண்குறியீட்டு எண். 30-32-02, கணக்கு குறியீட்டு எண்.210-10-06-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைகுழு (பொது சசுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.09.2024 அன்று தீர்மான எண்.91/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.164/2024, நாள்.23.09.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.சு.து.ந.க.எண்.சு3 / 1078 / 2024**

**ஆணையர் அவர்களின் 09.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:364 / 2024** **பொருள் எண்.45**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4 - சுகாதாரத்துறை - கோட்டம்-34 முதல் 48 வரையுள்ள கோட்டங்களில் 27.09.2023 முதல் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள 142 உறுப்பினர்களைக் கொண்ட 9 சுய உதவிக் குழுக்கள் (SHG) மூலம் சுகாதாரக் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது - இப்பணிக்காலம் 25.09.2024 அன்றுடன் முடிவடைகிறது - தற்போது மண்டலம்-4ல் 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு காலங்களில் ஓய்வு, இறப்பு, பணியிடமாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆகிய இனங்களில் காலியாக உள்ள 29 நிரந்தரப் பணியாளர்களின் பணியிடங்கள் காலியாக உள்ளதால் கூடுதலாக 29 உறுப்பினர்கள் சேர்த்து மொத்தம் 171 உறுப்பினர்களை கொண்ட 11 சுய உதவிக் குழுக்கள் மூலம் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது - மேற்கண்ட அண்டை வீட்டு குழுவின் மூலம் 171 தற்காலிக சுகாதாரப் பணியாளர்கள் மூலம் 26.09.2024 முதல் 25.09.2025 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான செலவீனத் தொகையை நிதி ஆலோசகர் அவர்கள் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் அனுமதி.**

மன்றத் தீர்மான எண்.793/2018, நாள்.20.09.2018-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, சுகாதாரத்துறையில் கோட்டம்-34 முதல் 48 வரை உள்ள கோட்டங்களில் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள நீர்தேக்க தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை மருந்து தெளிக்கப்பட்டு அழிப்பதன் மூலம் கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைக்கால் மற்றும் மூளை காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த கொசு மருந்து தெளிக்கவும், முதிர்ந்த கொசுக்களை அழிப்பதற்கு புகைப்பரப்பும் பணிகளை மேற்கொள்ளவும், மேலும், நீர்வழித் தடங்களில் உள்ள ஆகாயத்தாமரை அகற்றும் பணி மற்றும் பிற சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதாரம் திட்டத்தில் *(NULM) 142* உறுப்பினர்களை கொண்ட 9 சுய உதவி குழுக்கள் மூலமாக சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மன்றத் தீர்மான எண்.550/2023, நாள்.31.10.2023-ன்படி, மண்டலம்-4, சுகாதாரத் துறையில் கோட்டம்-34 முதல் 48 வரையுள்ள மேற்கண்ட சுகாதாரப் பணிகள் 142 உறுப்பினர்களை கொண்ட 9 சுயஉதவிக் குழுக்கள் *(SHG)* மூலம் மேற்கொள்ள 26.09.2023 முதல் 25.09.2024 வரை ஓராண்டு காலத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மண்டலம்-4 சுகாதாரத் துறையில் நான்காம் நிலையில் பணிபுரிந்து கடந்த 2020 முதல் 2024 வரையிலான 5 வருட காலங்களில் ஓய்வு, இறப்பு, பணியிடமாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆகிய இனங்களில் 29 நிரந்தர பணியாளர்களின் பணியிடம் காலியாக உள்ளதால் மழைநீர்க் கால்வாய்கள் மற்றும் பக்கவாட்டு கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கும் பணி, வாகனங்கள் மூலம் புகைபரப்பும் பணி, கால்வாய்களில் ஆகாய தாமரைகளை அகற்றுதல் மற்றும் மருந்து தெளிக்கும் பணி ஆகிய பணிகளில் தொய்வு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு தற்போது அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மூலம் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள கூடுதலாக 29 உறுப்பினர்கள் தேவைப்படுகின்றனர்.

எனவே, மண்டலம்-4ல் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள கோட்டம் வாரியாக தேவைப்படும் உறுப்பினர்களின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அட்டவணை-I

| விவரம் | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வீடுகளின் எண்ணிக்கை | 5942 | 9412 | 6756 | 6592 | 4678 | 4420 | 5930 | 6487 | 6240 | 6483 | 8677 | 7352 | 6651 | 4182 | 3295 | 93097 |
| மொத்த செக்டார்களின் எண்ணிக்கை | 13 | 19 | 14 | 13 | 12 | 11 | 12 | 16 | 14 | 14 | 10 | 14 | 13 | 11 | 9 | 195 |
| தற்போது செக்டார்களின் எண்ணிக்கை | 14 | 18 | 14 | 15 | 10 | 10 | 11 | 13 | 13 | 13 | 11 | 14 | 13 | 11 | 7 | 187 |
| மழைநீர் கால்வாய் பக்கவாட்டு கால்வாய் நீளம்(*km*) | 1 | 5 | 7 | 5 | 3 | 0 | 0 | 11 | 0 | 0 | 0 | 3 | 0 | 3 | 0 | 38 |
| மழைநீர் கால்வாய்களில் கொசுமருந்து தெளிக்கும் பணி | 1 | 2 | 1 | 1 | 4 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 22 |
| *ZONE* 4 கால்வாய் கூவம் ஆறு தூர்வாரும் பணி | 0 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 4 | 0 | 0 | 0 | 2 | 0 | 1 | 2 | 13 |
| மொத்த *(SHG)* பணியாளர்களின் எண்ணிக்கை | 11 | 12 | 13 | 13 | 9 | 9 | 8 | 10 | 11 | 10 | 8 | 9 | 9 | 5 | 5 | 142 |
| நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 4 | 9 | 7 | 5 | 5 | 4 | 6 | 12 | 6 | 7 | 6 | 8 | 6 | 6 | 6 | 97 |
| | வாகனம் மூலம் புகைபரப்பும் பணி | | | | | | | | | | | | | | | 4 |
| | தலைமையகம் பிறப்பு மற்றும் இறப்பு பிரிவு | | | | | | | | | | | | | | | 1 |
| தற்போது தேவைப்படும் *(SHG)* உறுப்பினர்களின் எண்ணிக்கை | 2 | 5 | 2 | 3 | 1 | 4 | 2 | 0 | 3 | 1 | 0 | 1 | 0 | 5 | 0 | 29 |

கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் அவர்களின் 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் பணிபுரியும் சுகாதார களப்பணி மேற்கொள்ளும் உறுப்பினர்களுக்கு நாளொன்றுக்கு தினக்கூலியாக ரூ.753/-வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில், மண்டலம்-4ல் சுகாதாரத் துறையில் அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மூலம் குழுக்கள் அமைத்து

அதன் மூலம் 365 நாட்களுக்கு குழு உறுப்பினர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு சுகாதாரக் களப்பணிகளில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்-4 அவர்களின் 06.08.2024 நாளிட்ட ஒப்புதலில், மண்டலம்-4ல் சுகாதாரத் துறையில் 34 முதல் 48 வரையுள்ள கோட்டங்களில் 27.09.2023 முதல் 142 தற்காலிகப் பணியாளர்களை கொண்ட 9 சுயஉதவிக் குழுக்கள் *(SHG)* மூலம் சுகாதாரக் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பணிக்காலம் 25.09.2024 அன்றுடன் முடிவடைகிறது. மேலும், மண்டலம்-4ல் 2020 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையிலான 5 வருட காலங்களில் ஓய்வு, இறப்பு, பணியிடமாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆகிய இனங்களில் காலியாக உள்ள 29 நிரந்தரப் பணியாளர்களின் பணியிடங்கள் காலியாக உள்ளதால் மழைநீர்க் கால்வாய்கள் மற்றும் பக்கவாட்டு கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கும் பணி, வாகனங்கள் மூலம் புகைபரப்பும் பணி, கால்வாய்களில் ஆகாய தாமரைகளை அகற்றுதல் மற்றும் மருந்து தெளிக்கும் பணி ஆகிய பணிகளில் தொய்வு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மூலம் 171 தற்காலிக சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு சுகாதாரப் களப்பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஆகவே, அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மூலம் 171 தற்காலிக சுகாதார பணியாளர்களை 26.09.2024 முதல் 25.09.2025 வரை ஓராண்டு காலத்திற்கு சுகாதாரப் பணிகளில் ஈடுபடுத்த ஆணை வேண்டி ஆணையர் அவர்களுக்கும் மற்றும் மன்றத் துறைக்கும் குறிப்பு சமர்ப்பிக்க மண்டல அலுவலர்-4 அவர்களின் ஆணை பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

அட்டவணை-*II*

| வ. எண் | பணியின் விவரம் | அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மூலம் தற்காலிக சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கை | ஆணையர் அவர்களின் ஆணையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் *(2024* – 2025 ஆம் ஆண்டுக்கானது) | தோராய செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| *1.* | கொசுப்புழு தடுப்புப் பணி, மருந்து தெளிப்புப் பணி புகைப்பரப்பும் பணி நீர்வழித் தடப்பணி மற்றும் சுகாதாரப் பணிகள் | *171* | ரூ.753/- | ரூ.753/- *X* 171 *X* 365 நாட்கள் = ரூ.*4,69,98,495/-* |

எனவே,

| | |
|---|---|
| அ) | மண்டலம்-4, சுகாதாரத்துறை, கோட்டம்-34 முதல் 48 வரையுள்ள மேற்கண்ட சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மூலம் 171 தற்காலிக சுகாதாரப் பணியாளர்களை 26.09.2024 முதல் 25.09.2025 வரை ஓராண்டு காலத்திற்கு எடுத்துக் கொள்ள நிர்வாக அனுமதியும், |

| | |
|---|---|
| ஆ) | கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் அவர்களின் 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி (தி.க.மே.து.ந.க. எண்.அ3/3974/2023), ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.753/-வீதம் X 171 நபர்கள் X 365 நாட்கள் = ரூ.4,69,98,495/-ற்கு (ரூபாய் நான்கு கோடியே அறுபத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நானூற்றி தொண்ணூற்று ஐந்து மட்டும்) நிர்வாக அனுமதியும், |
| இ) | சுகாதாரப் பணியில் ஈடுபட்டு வரும் அண்டை வீட்டு குழுவின் (SHG) தற்காலிக சுகாதாரப் பணியாளர்கள் எவரேனும் தொடர்ந்து பணிக்கு வர தவறும்பட்சத்தில் உறுப்பினரை மண்டல அலுவலர்-4 அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும், |
| ஈ) | சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளும் அண்டை வீட்டு குழுவின் (SHG) தற்காலிக சுகாதாரப் பணியாளர்கள் பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர்-4 அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதனடிப்படையில் கணக்கிட்டு நாள் ஒன்றுக்கு தினக்கூலி ரூ.753/- வீதம் குழுக்களுக்கு வழங்க அனுமதியும், இவர்களுக்கான ஊதியத்தை RTGS முறையில் வழங்க அனுமதியும், |
| உ) | அரசாணை எண்.36(2D), தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (J1) துறையின் மூலம் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும், |
| ஊ) | இப்பணிக்கான செலவீனத் தொகையை கணக்கு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-100-602 என்ற தலைப்பில் ரூ.5.00 கோடியினை கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும், |

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.09.2024 அன்று தீர்மான எண்.92/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று அட்டவணை-1ல் குறிப்பிட்டுள்ள கோட்டங்களுக்கு மட்டுமே கூடுதலாக வழங்கப்படும் பணியாளர்களை பணியமர்த்த வேண்டும் மற்றும் அவர்களை மாற்றுப்பணி அடிப்படையில் வேறு இடங்களில் பணிபுரிய பணிக்க கூடாது என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.165/2024, நாள்.23.09.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>ம.அ.8. ந.க.எண்.எச்1 / 1936 / 2024</u>**

**<u>ஆணையர் அவர்களின் 17.09.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:365 / 2024** **பொருள் எண்.46**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-8, பகுதி-21 முதல் 23 வரையுள்ள கோட்டம்-94 முதல் 108 வரை - அண்டைவீட்டு குழுவின் (SHG) கீழ் பணியமர்த்தப்பட்டுள்ள தற்காலிக சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2024ல் முடிவடைகிறது - 01.10.2024 முதல் 31.03.2025 வரை 182 நாட்களுக்கு 149 தற்காலிக சுகாதார பணியாளர்களை பணியமர்த்த நிர்வாக அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-8 (அண்ணா நகர்) பகுதி 21, 22 மற்றும் 23 (கோட்டம் 94 முதல் 108 வரை) 15 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் சுமார் 81,027 வீடுகள் உள்ளன. இங்கு டெங்கு, மலேரியா, சிக்குன் குனியா போன்ற கொசுவினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழுக்கள் வளரிடங்களை கண்டறிந்து அழிக்கும் பணிகளான கிணறு, கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் மருந்திடும் பணி *(Sector Work)* மழைநீர் கால்வாய், நீர்வழி பிரிவுகளில் வளரும் கொசுப்புழுவை அழிக்கும் வகையில் மருந்து தெளிக்கும் பணி, புகை மருந்து அடிக்கும் பணி, தடை செய்யப்பட்ட நெகிழி பறிமுதல் செய்யும் பணி மற்றும் பேரிடர் காலங்களில் அனைத்து பொது சுகாதார பணிகளை மேற்கொள்ளுதல் மேலும் எண்ணற்ற பொது சுகாதார துறை சார்ந்த அனைத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மொத்தம் 226 சுகாதார பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். 77 நிரந்தர சுகாதார பணியாளர்கள் அல்லாமல் 149 தற்காலிக சுகாதார பணியாளர்களை *(SHG)* பணியமர்த்த 13.12.2023 நாளிட்ட ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது. எனவே மொத்தம் 149 எண்ணிக்கையில் தற்காலிக சுகாதார பணியாளர்களை பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 30.09.2024 ல் முடிவடைகிறது.

தலைமை பொறியாளர் (தி.க.மே) அவர்களின், 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின்படி 01.04.2024 முதல் ரூ.687/- லிருந்து ரூ.753/- ஆக உயர்த்தி அந்தந்த மண்டலத்திலேயே வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 1 முதல் 15 மண்டலங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உயர்த்தப்பட்ட ஊதியம் 01.04.2024 முதல் வழங்க நடவடிக்கையில் உள்ளது.

எனவே,

அ) மண்டலம்-8 பகுதி-21, 22 மற்றும் 23 ற்கு உட்பட்ட கோட்டம்-94 முதல் 108 வரை உள்ள பகுதிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.753/- வீதம் 01.10.2024 முதல் 31.03.2025 வரை (182 நாட்கள்) ஆறு மாத காலத்திற்கு 149 தற்காலிக சுகாதார பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்களின் *(SHG)* மூலம் பணியில் ஈடுபடுத்தவும்,

ஆ) இப்பணிக்கான செலவினத்தை ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் (149 நபர்கள் *X* ரூ.753 *X 182* நாட்கள்) ரூ.2,04,19,854/- (ரூபாய் இரண்டு கோடியே நான்கு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) செலவினத்தை 2024-2025 ற்கு நிதி ஒதுக்கீடு செய்யவும்,

இ) சுகாதார துறையின் தலைப்பு குறியீட்டு எண்.30-*32*-02 கணக்கு தலைப்பு எண்.210-*10-06*-02 என்ற தலைப்பில் செலவினங்களை மேற்கொள்ளவும், ஒப்பந்தம் மற்றும் வரி விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.09.2024 அன்று தீர்மான எண்.93/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.166/2024, நாள்.23.09.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>ம.அ.9நக.எண்.எச்.3 / 1820 / 2024</u>**

**<u>ஆணையர் அவர்களின் 18.09.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:366 / 2024** **பொருள் எண்.47**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9 – பகுதி-24 முதல் 27 வரையுள்ள கோட்டம்-109 முதல் 126 வரை அண்டை வீட்டு குழு (SHG) கீழ் பணியமர்த்தப்பட்ட சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2024ல் முடிவடைகிறது- 01.10.2024 முதல் 31.03.2025 வரை ஆறுமாத காலத்திற்கு (182நாட்கள்) அண்டை வீட்டு குழுவின் (SHG)கீழ் பணியமர்த்தப்பட்ட 114 சுகாதாரப் பணியாளர்களை தற்காலிகமாகபணியமர்த்த நிர்வாகஅனுமதி.</u>**

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின், 23.11.2023 நாளிட்ட நிர்வாக அனுமதியின்படி, கொசுதடுப்பு மற்றும் ஒழிப்பு பணியை மேற்கொள்ளும் ஒப்பந்த தொழிலாளர்களை அந்தந்த மண்டலத்திலேயே அண்டை வீட்டு குழுவின் *(SHG)* குழுக்கள்அமைத்து அதன் மூலம் 365 நாட்களுக்கு தற்காலிக சுகாதார தொழிலாளர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த அந்தந்த மண்டல அலுவலர்கள் ஆணையரிடம் நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-9, பகுதி-24, 25, 26 (ம) 27, கோட்டம்-109 முதல் 126 வரை உள்ள 18 கோட்டங்களில் சுமார் 10 இலட்சம் மக்கள் தொகையும், 226557 வீடுகளும், 63 அரசு கட்டிடங்களும், 231 பள்ளிகளும், 92 குடிசைபகுதிகளும் உள்ளடங்கியுள்ள இப்பகுதிகளில் மலேரியா, டெங்கு மற்றும் இதர தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பு நடவடிக்கை பணிகளான, மழைநீர் வடிகால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணி, கால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணி, வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசுப்புழுகொல்லி மருந்து போடுதல், கொசுகொல்லி மருந்து தெளிக்கும் பணிகள், எலிக்கொல்லி மருந்து வைக்கும் பணிகள் மேற்கொள்ள ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ. 687/- வீதம் 114 தொழிலாளர்களை தற்காலிகமாக அண்டை வீட்டு குழு *(SHG)* திட்டத்தின் மூலம் 01.10.2023 முதல் 31.09.2024 வரை தற்காலிகமாக பணியமர்த்த மன்றத் தீர்மான எண். 602/2023, நாள்.29.11.2023-ன்படி, மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டு வந்தது.

மேற்படி வழங்கப்பட்ட ஆணை 30.09.2024 அன்றுடன் முடிவடைவதால், இப்பணிக்கு 109 முதல் 126 வரையிலான கோட்டங்களில் உள்ள 500 வீடுகள் 1 செக்டார் பணியாளர் என கணக்கிட்டு 1 செக்டாருக்கு 1 பணியாளர் என 160 செக்டார்களுக்கு 160 பணியாளர்கள் வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசுகொல்லி மருந்து இடும் பணிகளுக்காகவும், கொசுகொல்லி புகைபரப்பும் பணிகள் மேற்கொள்ள கோட்டம் வாரியாக தலா 1பணியாளர் என 18 கோட்டங்களுக்கு 18 பணியாளர்களும், கொசுகொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 23 பணியாளர்களும், மழைநீர் வடிகால்வாயில் கொசுகொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 31 பணியாளர்களும், கால்வாயில் கொசுகொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 22 பணியாளர்களும், இதரபணிகளுக்காக10 பணியாளர்களும் என கணக்கிட்டு மொத்தம் தேவைப்படும் சுகாதாரப் பணியாளர்களின் தேவை குறித்த அட்டவணை கீழ்கண்டவாறு,

| S.NO | DN | NO OF WORKERS | FOGGING WORKERS | NO OF SPRAY WORKERS | NO.OF SWD WORKERS | NO OF CANAL WORKERS | TOTAL WORKERS |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 109 | 9 | 1 | 1 | 2 | 0 | 13 |
| 2 | 110 | 8 | 1 | 1 | 3 | 2 | 15 |
| 3 | 111 | 8 | 1 | 1 | 7 | 2 | 19 |
| 4 | 112 | 7 | 1 | 1 | 1 | 0 | 10 |
| 5 | 113 | 11 | 1 | 1 | 1 | 0 | 14 |
| 6 | 114 | 7 | 1 | 1 | 2 | 1 | 12 |
| 7 | 115 | 7 | 1 | 1 | 2 | 0 | 11 |
| 8 | 116 | 9 | 1 | 2 | 3 | 0 | 15 |
| 9 | 117 | 8 | 1 | 1 | 2 | 8 | 20 |
| 10 | 118 | 9 | 1 | 1 | 1 | 0 | 12 |
| 11 | 119 | 8 | 1 | 1 | 1 | 0 | 11 |
| 12 | 120 | 8 | 1 | 1 | 2 | 2 | 14 |
| 13 | 121 | 7 | 1 | 1 | 1 | 2 | 12 |
| 14 | 122 | 10 | 1 | 1 | 2 | 0 | 14 |
| 15 | 123 | 14 | 1 | 2 | 1 | 1 | 19 |
| 16 | 124 | 11 | 1 | 2 | 1 | 4 | 19 |
| 17 | 125 | 12 | 1 | 2 | 2 | 0 | 17 |
| 18 | 126 | 7 | 1 | 2 | 2 | 0 | 12 |
| TOTAL WORKERS | | 160 | 18 | 23 | 36 | 22 | 259 |
| 19 | WATER WAYS , VM FOGG AND DATA ENTRY OPERATORS | | | | | | 05 |
| | | | | | | GRAND TOTAL | 264 |

மன்றத் தீர்மான எண். 602/2023, நாள்.29.11.2023-ன்படி, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு மண்டலம்-9க்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய 264 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களில் 150 நிரந்தர பணியாளர்கள் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். எனவே, மண்டலம்-9 பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய தேவைப்படும் 264 சுகாதாரப் பணியாளர்களில் 150 நிரந்தர பணியாளர்கள் போக மீதம் 114 சுகாதாரப் பணியாளர்களை பொது மக்களின் நலன் கருதி 01.10.2024 முதல் 31.03.2025 வரை (182 நாட்கள்) மேலும் ஆறு மாத காலத்திற்கு அண்டைவீட்டு குழுவின்(SHG) கீழ் தற்காலிகமாக பணியமர்த்த கீழ்காணும் இனங்களுக்கு ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை, 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின்படி நபர் ஒன்றுக்கு குறைந்தபட்ச தினசரி ஊதியம் ரூ.753/-வீதம் ஆறு மாதகாலத்திற்கு (182 நாட்கள்) (182X114X753) ரூ.1,56,23,244/- என்ற மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. 114 தற்காலிக சுகாதார பணியாளர்களை 01.10.2024 முதல் 31.03.2025 வரை ஆறு மாதகாலத்திற்கு (182 நாட்கள்) அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ளவும் ஒப்பந்த புள்ளி நடைமுறையில் இருந்து விலக்குஅளிக்கவும்,
3. இப்பணிக்குதேவையான நிதி ரூ.1,56,23,244/- (114 workers x per day Rs.753x182 days) 303202/210100602 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.09.2024 அன்று தீர்மான எண்.94/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.167/2024, நாள்.23.09.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.10.சு.து.ந.க.எண்.எச்2 / 1455 / 2024-25**

**ஆணையர் அவர்களின் 22.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:367 / 2024** **பொருள் எண்.48**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10 - பொது சுகாதாரத்துறை - தற்காலிக தொழிலாளர்கள் அண்டைவீட்டு குழுக்கள் மூலம் 147 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் - 01.10.2024 முதல் 30.09.2025 வரை ஓராண்டு காலத்திற்கு பணிபுரியவும், ஊதியம் வழங்கவும் - கூடுதலாக 10 நபர்கள் பணியமர்த்தவும் ஊதியம் வழங்கவும் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை பூச்சித்தடுப்பு துறையின், மன்றத் தீர்மான எண்.603/2023, நாள்:30.10.2023-ன்படி, மண்டலம்-10, பகுதிகளில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுமருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த, புகைமருந்து அடிக்கும் மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய்களில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும், 147 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும் 2023-24 ஆண்டில் 12 நிரந்தர பணியாளர்கள் பதவி உயர்வு மற்றும் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அதனை அண்டைவீட்டு குழுவின் மூலம் மன்றத் தீர்மான எண். 204/2024, நாள். 30.07.2024ன்படி 12 நபர்கள் 01.07.2024 முதல் 31.03.2025 வரை பணிபுரிய ஆணை பெறப்பட்டுள்ளது.

இக்குழுவில் பணிபுரியும் உறுப்பினர்களுக்கு அரசாணை எண் *(2D) 36*, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாடு *(J1)* துறை, நாள் - *16.06.2023, 2023-20*24 நிதி ஆண்டில் நிர்ணயித்த குறைந்தபட்ச தினக்கூலியாக நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.753/- (ரூபாய். எழுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) என நிர்ணயம் செய்து மன்ற தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

தற்போது கொசுப்புழு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வந்த நிரந்தர பணியாளர் 1 நபர் வயது முதிர்வு காரணமாக 30.04.2024 அன்று ஓய்வு பெற்றதாலும், மண்டலம்-10க்கு உட்பட்ட கோட்டங்களான 127, 130, 132 மற்றும் 135ல் உள்ள கதவு எண்கள் அதிக எண்ணிக்கைகள் உள்ளதாலும் கோட்டம் - 136 மற்றும் 138ல் உள்ள *MGR* கால்வாயில் (4 கி.மீட்டர்) மிதக்கும் பொருட்கள், குப்பைகளை அகற்றி கொசு புழு மருந்து தெளிக்கவும் 4 பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.

தற்போது மண்டலம் - *10*ல் 79,783 வீடுகள் உள்ளன, இதில் 77,758 வீடுகளில் மட்டுமே சுகாதாரம், காய்ச்சல் மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 159 பணியாளர்கள் உள்ளனர். மீதம் உள்ள 2025 வீடுகளில் பணியினை மேற்கொள்ள ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளதால் பணிகளில் தொய்வு மற்றும் தற்போது உள்ள பணியாளர்கள் மேல் கூடுதல் பணிகள் சுமத்தப்பட்டுள்ளது. எனவே 2025 எண்ணிக்கை கொண்ட வீடுகளில் பணிகளை மேற்கொள்ள கூடுதலாக 6 நபர்களும், *MGR* கால்வாயில் (4 கி.மீட்டர்) பணிபுரிய 4 பணியாளர்களையும் அண்டைவீட்டு குழுக்கள் மூலம் பணிபுரிய ஆணை வேண்டப்படுகிறது.

கோட்டம் -127ல் மொத்தம் *SAF GAMES VILLAGE*ல் உள்ள சிறப்பு அரசு அலுவலர் அடுக்கு மாடி குடியிருப்பில் 418 வீடுகள் மற்றும் நீதிபதிகள் குடியிருப்பில் 570 வீடுகள் உள்ளது. இதில் காய்ச்சல் மற்றும் கொசு புழு ஒழிப்பு பணியை மேற்கொள்ள பணியாளர் இல்லாததால் கூடுதலாக உள்ள 988 வீடுகளில் பணி மேற்கொள்ள 2 நபர் பற்றாக்குறையாக உள்ளது.

கோட்டம்-130ல் மொத்தம் 9 செக்டார் உள்ளது. ஆனால் தற்போது 8 செக்டார் பணியாளர்கள் மட்டும் உள்ளனர். கூடுதலாக1 செக்டார் (518 வீடுகள்) உள்ளது , இதில் காய்ச்சல் மற்றும் கொசு புழு ஒழிப்பு பணியை மேற்கொள்ள பணியாளர் இல்லாததால் கூடுதலாக 1 நபர் பற்றாக்குறையாக உள்ளது.

கோட்டம்-132ல் மொத்தம் 8 செக்டார் உள்ளது. ஆனால் தற்போது 7 செக்டார் பணியாளர்கள் மட்டும் உள்ளனர். கூடுதலாக1 செக்டார் (547 வீடுகள்) உள்ளது, இதில் காய்ச்சல் மற்றும் கொசு புழு ஒழிப்பு பணியை மேற்கொள்ள பணியாளர் இல்லாததால் கூடுதலாக 1 நபர் பற்றாக்குறையாக உள்ளது.

கோட்டம் -135ல் மொத்தம் 11 செக்டார் உள்ளது. ஆனால் தற்போது 10 செக்டார் பணியாளர்கள் மட்டும் உள்ளனர். கூடுதலாக1 செக்டார் (490 வீடுகள்) உள்ளது, இதில் காய்ச்சல் மற்றும் கொசு புழு ஒழிப்பு பணியை மேற்கொள்ள பணியாளர் இல்லாததால் கூடுதலாக 1 நபர் பற்றாக்குறையாக உள்ளது.

கோட்டம்–136ல் உள்ள *MGR* கால்வாயில் (2 கி.மீட்டர்) மிதக்கும் பொருட்கள் மற்றும் குப்பைகளை அகற்றி கொசு புழு மருந்து தெளிக்கவும் 2 பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்

கோட்டம்–138ல் உள்ள *MGR* கால்வாயில் (2 கி.மீட்டர்) மிதக்கும் பொருட்கள், குப்பைகளை அகற்றி கொசு புழு மருந்து தெளிக்கவும் 2 பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்

எனவே, காலியாக உள்ள 5 செக்டர்களுக்கு 5 பணியாளர்களும், கோட்டம்– 136 மற்றும் 138ல் உள்ள *MGR* கால்வாயில் பணிபுரிய 4 நபர்களும், பணியாளர் 1 நபர் வயது முதிர்வு ஓய்வு பெற்றதாலும், கூடுதலாக மொத்தமாக 10 பணியாளர்களை அண்டைவீட்டு குழுவின் உதவிக்குழுக்கள் மூலமாக பணிமர்த்த ஆணை வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர் | பதவி | பணியாளர் எண் | ஓய்வு |
|---|---|---|---|---|
| 1 | A. கணேசன், (கோட்டம்-128) | MDT | 764338 | 30.04.2024 |
| 2 | கோட்டம்-127 | 02 | | |
| 3 | கோட்டம்-130 | 01 | | |
| 4 | கோட்டம்-132 | 01 | | |
| 5 | கோட்டம்-135 | 01 | | |
| 6 | கோட்டம்-136 | 02 | | |
| 7 | கோட்டம்-138 | 02 | | |
| | மொத்தம் | 10 நபர்கள் | | |

அரசாணை எண் (2D) 36, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாடு (J1) துறை, நாள்.16.06.2023-ன்படி, 2023-2024ஆம் நிதி ஆண்டில் “நிர்ணயித்த குறைந்தபட்ச தினக்கூலியாக நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.753/- என நிர்ணயம் செய்யப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கான செலவீனத் தொகையாக ஒரு ஆண்டிற்கு ரூ.753 x365 நாட்கள்x147 கூடுதலாக 10 நபர்கள் மொத்தம் 157 நபர்களுக்கு ரூ.4,31,50,665/- செலவீனத் தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-10 பொது சுகாதாரத்துறையில் அண்டைவீட்டு குழுவின் உதவிக்குழுக்கள் மூலம் ஏற்கனவே உள்ள 147 பணியாளர்களுடன் அண்டைவீட்டு குழுவின் உதவிக்குழுக்கள் மூலம் மேலும் 10 நபர்கள் கூடுதலாக பணியமர்த்தவும்.
2. அரசாணை எண் (2D) 36, 2023-24 ஆம் நிதி ஆண்டில் நிர்ணயித்த குறைந்தபட்ச தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 753/- (ரூபாய் எழுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) என நிர்ணயம் செய்யவும், இதற்கான செலவீனத் தொகையாக பின்னர் 2024-2025 ஆம் நிதி ஆண்டில் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்படவுள்ள அத்தொகையை தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு கணக்கிட்டு வழங்குவதற்கும்.
3. சம்மந்தப்பட்ட கோட்ட சுகாதார ஆய்வாளர்/துப்புரவு அலுவலர் ஆகியோரின் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளவும் இந்த உறுப்பினர்கள் பணி செய்த நாட்களுக்கு சம்பந்தப்பட்ட சுகாதார ஆய்வாளர்/ துப்புரவு அலுவலர் அவர்களிடமிருந்து வருகைப்பதிவேடு பெற்று அதன் அடிப்படையில் அவர்களுக்கு பணிபுரிந்த நாட்களுக்கான தொகையை கணக்கிட்டு வழங்குவதற்கும்.
4. பணியாளர்களுக்கான ஊதியத்தை மண்டலம்-10 பொது சுகாதாரத்துறையின் மூலம் பிரிவு குறியீட்டு எண்.30-32-02 கணக்கு தலைப்பு எண். 210-10-06-02 (Payment to Casual Health Works) என்ற கணக்கு தலைப்பில் மேற்கொள்வதற்கு அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.09.2024 அன்று தீர்மான எண்.95/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

"23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.168/2024, நாள்.23.09.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பொ.து.ந.க.எண்.ஈ3 / 26735 / 2024**

**ஆணையாளர் அவர்களின் 20.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:368 / 2024** **பொருள் எண்.49**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலரின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.**

மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை *A1/e-1657679/2024*, நாள்: *23.08.2024*ன்படி, கீழ்காணும் அலுவலர் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | திரு. தி. ஜெகஜீவன்ராம்,<br>தனி வட்டாட்சியர் (நிலம் (ம) உடைமை),<br>நிலம் மற்றும் உடைமைத் துறை,<br>பெருநகர சென்னை மாநகராட்சி | மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை *A1/e-1657679/2024*, நாள்: *23.08.2024* | *31.08.2024*<br>பி.ப. |

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது".

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

******

**<u>சகு.நக.எண்.சகு.1 / 7079 / 2023</u>**

**<u>ஆணையர் அவர்களின் 24.09.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 369 / 2024** **பொருள் எண்.50**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - சட்டகுழுமம் - நிலை வழங்குரைஞர்களின் பணிக்கால நீட்டிப்பு - பின்னேற்பு அனுமதி.</u>**

மன்ற தீர்மான எண்.326/2022, நாள்.30.07.2022, மன்ற தீர்மான எண்.358/2022, நாள்.30.08.2022, மன்ற தீர்மான எண்.710/2022, நாள்.28.11.2022 ஆகிய மன்ற தீர்மானங்களின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக நீதிமன்ற வழக்குகளை கையாளுவதற்காக நான்கு கட்டங்களாக ஓராண்டு காலத்திற்கு 25 நிலை வழக்குரைஞர்களை நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மன்ற தீர்மான எண்.326/2022 நாள்.01.08.2022ன்படி முதற்கட்டமாக கீழ்கண்ட 15 நிலைவழக்குரைஞர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக 01.08.2022 முதல் *31.07.2023* வரை ஓராண்டு காலத்திற்கு நடைமுறை விதிகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு ஒதுக்கப்படும் வழக்குகளை கையாளுவதற்காக மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் ஆணை பெறப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை - I</u>**

| வ.எண் | நிலை வழக்குரைஞர்களின் பெயர் திரு / திருமதி | பதிவு எண் | பணி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | *G.T*.சுப்ரமணியன் | Ms.998/1989 | உயர்நீதிமன்றம் |
| 2 | *A.C*.மணிபாரதி | Ms.936/1999 | தேசிய பசுமை தீர்ப்பாயம் |
| 3 | *G*.ஸ்ரீராம் | Ms.1018/1993 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 4 | *D*.புவனசுந்தரம் | Ms.405/1993 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 5 | *P*.சின்னராஜா | Ms.757/2005 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 6 | *J*.சீனிவாசன் | Ms.3191/2007 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 7 | *A*.அருண்பாபு | Ms.98/1997 | உயர்நீதிமன்றம் |
| 8 | *S*.கோபிநாதன் | Ms.8481/1991 | உயர்நீதிமன்றம் |
| 9 | *P.T*.ரமாதேவி | Ms.1732/2000 | உயர்நீதிமன்றம் |
| 10 | *K*.அஸ்வினிதேவி | Ms.1049/2009 | உயர்நீதிமன்றம் |
| 11 | *D.B.R*.பிரபு | Ms.2187/2005 | உயர்நீதிமன்றம் |
| 12 | *E.C*.ரமேஷ் | Ms.355/2004 | உயர்நீதிமன்றம் |
| 13 | *M*.மணிவேலன் | Ms.226/2016 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 14 | *S*.சந்தோஷ் | Ms.1290/2007 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 15 | *S.S*.தேன்மொழி | Ms.2157/2006 | நகர உரிமையியல் நீதிமன்றம் |

மேலும், மன்ற தீர்மான எண். 358/2022 நாள்.30.8.2022ன்படி 1 நிலை வழக்குரைஞர் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியமர்த்தப்பட்டுள்ளார். பின்வரும் 1 நிலை வழக்குரைஞருக்கு 01.09.2022 முதல் 31.08.2023 வரையிலான ஓராண்டு காலத்திற்கு நடைமுறை விதிகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு ஒதுக்கப்படும் வழக்குகளை கையாளுவதற்காக மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் ஆணை பெறப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை - *II*</u>**

| வ.எண் | நிலை வழக்குரைஞரின் பெயர் திரு / திருமதி | பதிவு எண் | பணி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | *R*. ஸ்ரீதர் | Ms.1049/2006 | உயர்நீதிமன்றம் |

மேலும், மன்ற தீர்மான எண்.710/2022 நாள்.28.12.2022ன்படி 8 நிலைவழக்குரைஞர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியமர்த்தப்பட்டனர். அதில் திரு. நூருதீன், என்ற நிலை வழக்குரைஞர் குற்ற வழக்கில் சம்மந்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளதால், கூடுதல் தலைமை செயலாளர்/ ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ச.கு.ந.க.எண்.ச.கு.1/2137/2023, நாள்.19.05.2023ன்படி, சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார். பின்வரும் 7 நிலை வழக்குரைஞர்களுக்கு 18.01.2023 முதல் 17.01.2024 வரையிலான ஓராண்டு காலத்திற்கு நடைமுறை விதிகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு ஒதுக்கப்படும் வழக்குகளை கையாளுவதற்காக மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் ஆணை பெறப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை - *III*</u>**

| வ.எண் | நிலை வழக்குரைஞர்களின் பெயர் திரு / திருமதி | பதிவு எண் | பணி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | ப்பி.பிரித்வி சோப்டா | Ms.2817/2015 | உயர்நீதிமன்றம் |
| 2 | எம்.சுரேஷ்குமார் | Ms.727/1994 | தேசிய பசுமை தீர்ப்பாயம் |
| 3 | எஸ்.வனிதா ஜாய்ஸ் ராணி | Ms.1414/2007 | உயர்நீதிமன்றம் |
| 4 | ஜெ. ஜென்னி | E.777/2005 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 5 | என்.ஆர். ரமேஷ்கண்ணா | Ms.1476/1994 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 6 | எம்.பி.சிவஞானம் | Ms 4027/2012 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 7 | எம். புருஷோத்தமன் | Ms. 87/2018 | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 8 | எஸ் .நூருத்தீன் | Ms. 1567/2017 | பணி நீக்கம் |

மேலும், துணை ஆணையாளர் (கல்வி) அவர்கள் தலைமையில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில், புதிய வழக்குகளை 28 நிலை வழக்குரைஞர்களுக்கும் மண்டலம் மற்றும் துறை வாரியாக பிரித்து அளிக்குமாறும், பத்தி வாரி குறிப்புகள் *(Parawar Remarks)* வழங்கப்படாமல் ஏற்கனவே நிலுவையிலுள்ள பழைய வழக்குகளை மண்டலம் மற்றும் துறை வாரியாக

சம்மந்தப்பட்ட நிலைவழக்குரைஞர்களுக்கு பிரித்து அளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 11.06.2024 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி 28 நிலை வழக்குரைஞர்களுக்கும் மண்டலம் மற்றும் துறை வாரியாக வழக்குகள் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. மேலும், நிலுவையில் உள்ள பத்திவாரி குறிப்புகள் பெறப்படாத வழக்குகளும் பிரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், நியமனக்குழு தீர்மானம் எண்.08/2024, நாள்.20.06.2024ன்படி,

**“....தற்போதுள்ள நிலை வழக்குரைஞர்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது....”**

துணை ஆணையர் கல்வி அவர்கள் 12.07.2024 அன்று ஆய்வு செய்த பின்பு அவர்களின் அறிவுறுத்தலின்படி பத்திவாரி குறிப்பு பெறப்படாத வழக்குகள் மற்றும் எதிர் உறுதி ஆவணம் நிலுவையில் உள்ள வழக்குகளை தற்பொழுது மண்டலம் மற்றும் துறை வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலை வழக்குரைஞர்களுக்கு பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

23 நிலைவழக்குரைஞர்கள் அவ்வப்போது பணி நியமனம் செய்யப்பட்டு கோப்பு நடவடிக்கையில் இருந்ததாலும், அதன்பின்னர் 23 நிலைவழக்குரைஞர்களுக்கு காலநீட்டிப்பிற்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டபோது தனியர்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து அதன் பின்னர் காலநீட்டிப்பு குறித்து முடிவெடுக்க சமர்ப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டதாலும், செயல்பாடுகளை குறித்து ஆய்வு கூட்டம் நடந்த பிறகு மீண்டும் கோப்பு சமர்ப்பிக்கப்பட்டபோது நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகு கோப்பு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்கூறிய காரணங்களால் கால நீட்டிப்பிற்கு கோப்பினை சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆகவே, மேலே கோரப்பட்ட நியமனக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் மண்டல வாரியாக நிலை வழக்குரைஞர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது.

மேலும், 13.08.2024 அன்று ஆணையர் அவர்களின் தலைமையில் நிலை வழக்குரைஞர்களுடன் நீதிமன்ற வழக்குகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. முக்கியத்துவம் வாய்ந்த கோப்புகள் குறித்து சம்மந்தப்பட்ட நிலை வழக்குரைஞர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. நிலை வழக்குரைஞர்களுக்கு ஆணையர் அவர்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. சொத்துவரி குறித்த நிலுவை விவரங்களை *Additional Advocate General* அவர்களுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது. 21.06.2024 நாளிட்ட நியமனக்குழு தீர்மானத்தில் “இக்கோப்பினை கூர்ந்தாய்வு செய்து மீள சமர்ப்பிக்க நியமனக்குழு தீர்மானிக்கின்றது.” என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 23.09.2024 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் சென்னை மாநகராட்சி நிலைவழக்குரைஞர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் ஒவ்வொரு நிலைவழக்குரைஞர்கள் திறன் குறித்தும் தனித்தனியே ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இனி

வரும் காலங்களில் நீதிமன்ற வழக்குகளை திறன்பட கையாளுமாறு கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆகவே, மீண்டும் கோப்பு கால நீட்டிப்பிற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 28 நிலை வழக்குரைஞர்களில் 23 நிலை வழக்குரைஞர்களுக்கு 1 வருட காலம் முடிவடைந்துள்ளதாலும், மீதமுள்ள 5 நிலை வழக்குரைஞர்களில் 2 நபர்களுக்கு அக்டோபர் 2024 வரையிலும் மற்றும் 3 நபர்களுக்கு ஜனவரி 2025 வரையிலும் ஒரு வருட காலம் முடிவடைவதால், தற்போது 23 நிலை வழக்குரைஞர்களுக்கு (அட்டவணை-*I*ல் வ.எண்.1 முதல் 15, அட்டவணை-*II*ல் வ.எண்.1, அட்டவணை-*III*ல் வ.எண். 1 முதல் 7, மட்டும்) கால நீட்டிப்பு வழங்க கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. அட்டவணை-*I*ல் காணும் 15 நிலை வழக்குரைஞர்களுக்கு 01.08.2023 முதல் 31.01.2024 வரையிலான காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யவும் மற்றும் தொடர் கட்டணம் *(Retainer Fees)* வழங்கவும் பின்னேற்பு ஆணை வேண்டப்படுகிறது.
2. அட்டவணை-*II*ல் காணும் 1 நிலை வழக்குரைஞருக்கு 01.09.2023 முதல் 31.01.2024 வரையிலான காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யவும் மற்றும் தொடர் கட்டணம் *(Retainer Fees)* வழங்கவும் பின்னேற்பு ஆணை வேண்டப்படுகிறது.
3. அட்டவணை-*III*ல் காணும் மேற்படி, 7 நிலை வழக்குரைஞர்களுக்கு *17.01.2024* முதல் 31.01.2024 வரை மட்டும் கால நீட்டிப்பு செய்யவும், தொடர் கட்டணம் *(Retainer Fees)* வழங்கவும் ஆணை வேண்டப்படுகிறது.
4. மேலும், மேற்காணும் 23 நிலை வழக்குரைஞர்களுக்கு 01.02.2024 முதல் 31.01.2025 வரை ஓராண்டு காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யவும், தொடர் கட்டணம் *(Retainer Fees)* வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து,
மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது".

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**
**********

**ம.அ1.நக.எண்.பி1 / 02986 / 2024**
**ஆணையர் அவர்களின் 18.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 370 / 2024** **பொருள் எண்.51**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 1, வார்டு - 2ல் நேரு நகரில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1, வார்டு-2ல் நேரு நகரில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது.
இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம்:

| வ. எண். | மண்டலம்-1 | வார்டு-2 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-1, பகுதி-1, வார்டு-2, நேரு நகரில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 2002 -2003ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 1116.73 சதுரடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 1116.73 சதுரடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | 143232.49 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் உள்ளது |
| 7. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய அங்கன்வாடி கட்டடம் நமக்கு நாமே திட்டத்தில் கட்டப்பட உள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | கட்டடத்தில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது, இடிந்து விழும் அபாயம் உள்ளது |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர் – 1 அவர்கள் |
| 10. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண். 1102/2024, நாள்.12.07.2024 |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1, வார்டு-2ல் நேரு நகரில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடத்தில் விரிசல்கள் ஏற்பட்டு, இடிந்து விழும் அபாயகரமான நிலையில் உள்ளதாலும், இவ்விடத்தில் புதிய ICDS கட்டடம் நமக்கு நாமே திட்டத்தில் கட்டுவதற்கு ஒப்பந்த புள்ளிகள் கோரி தொடர் நடவடிக்கையில் உள்ளதாலும், திட்டப்பணிகளின் அவசர அவசியத்தை முன்னிட்டு கட்டடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 18.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.40/2024ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ1.நக.எண். பி1 / 02984 / 2024**
**ஆணையர் அவர்களின் 18.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:371 / 2024** **பொருள் எண்.52**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 1, வார்டு - 2ல் காட்டுக்குப்பம் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1, வார்டு-2ல் காட்டுக்குப்பம் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது.
இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம்:

| வ. எண். | மண்டலம்-1 | வார்டு-2 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-1, பகுதி-1, வார்டு-2ல் உள்ள காட்டுக்குப்பம் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1982 -1983ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 979.52 சதுரடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 979.52 சதுரடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | 34529.78 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் உள்ளது |
| 7. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய அங்கன்வாடி கட்டடம் நமக்கு நாமே திட்டத்தில் கட்டப்பட உள்ளது |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | கட்டடத்தில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது, இடிந்து விழும் அபாயம் உள்ளது |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர்–1 அவர்கள் |
| 10. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண். 1097/2024, நாள்.12.07.2024 |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 பகுதி-1, வார்டு-2ல் காட்டுக்குப்பம் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடத்தில் விரிசல்கள் ஏற்பட்டு, இடிந்து விழும் அபாயகரமான நிலையில் உள்ளதாலும், இவ்விடத்தில் புதிய ICDS கட்டடம் நமக்கு நாமே திட்டத்தில் கட்டுவதற்கு ஒப்பந்த புள்ளிகள் கோரி தொடர் நடவடிக்கையில் உள்ளதாலும், திட்டப்பணிகளின் அவசர அவசியத்தை முன்னிட்டு கட்டடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 18.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.41/2024ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ1.நக.எண். பி1 / 02985 / 2024**
**ஆணையர் அவர்களின் 18.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண் : 372 / 2024** **பொருள் எண். 53**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 1, வார்டு-2ல் எல்லையம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1, வார்டு-2ல் உள்ள எல்லையம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம்:

| வ. எண். | மண்டலம்-1 | வார்டு-2 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-1, பகுதி-1, வார்டு-2ல் உள்ள எல்லையம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 2002-2003 ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 367 சதுரடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 367 சதுரடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | 28646.50 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் உள்ளது |
| 7. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய அங்கன்வாடி கட்டடம் நமக்கு நாமே திட்டத்தில் கட்டப்பட உள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | கட்டடத்தில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது, இடிந்து விழும் அபாயம் உள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர் – 1 அவர்கள் |
| 10. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண். 1103/2024, நாள்.12.07.2024 |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -1, பகுதி-1, வார்டு-2ல் எல்லையம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டடத்தில் விரிசல்கள் ஏற்பட்டு, இடிந்து விழும் அபாயகரமான நிலையில் உள்ளதாலும், இவ்விடத்தில் புதிய ICDS கட்டடம் நமக்கு நாமே திட்டத்தில் கட்டுவதற்கு ஒப்பந்த புள்ளிகள் கோரி தொடர் நடவடிக்கையில் உள்ளதாலும், திட்டப்பணிகளின் அவசர அவசியத்தை முன்னிட்டு கட்டடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 18.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.42/2024ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ1.ந.க.எண்.பி1 / 00732 / 2024**

**ஆணையர் அவர்களின் 18.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 373 / 2024** **பொருள் எண்.54**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 1, பகுதி -1, வார்டு எண் - 4, இராமநாதபுரம் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி -1, வார்டு எண்-4, இராமநாதபுரம் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம்:

| வ. எண். | மண்டலம்-1 | வார்டு-4 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-1, பகுதி-1, வார்டு எண்-4, இராமநாதபுரம் சென்னை நடுநிலைப்பள்ளி பழைய கட்டடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | சுமார் 33 ஆண்டுகளுக்கு முன்பு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | தரைதளம் = 23.00மீX9.00மீ = 207.00 சதுர மீ<br>முதல் தளம் = 23.00மீX9.00மீ = 207.00 சதுர மீ<br>= 414.00 சதுர மீ |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 414.00 சதுர மீ |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.65049.44 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | இல்லை |
| 7. | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய வகுப்பறைகள் (G+2) கட்டடம் கட்டப்பட உள்ளது |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | இராமநாதபுரத்தில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டடத்தில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது தரைதளம் தாழ்வாக உள்ளதாலும் மற்றும் இடிந்து விழும் அபாயகரமான பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர் – 1 அவர்கள் |
| 10. | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண். 870/2024, நாள்.19.02.2024 |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1, வார்டு எண்-4 இராமநாதபுரத்தில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டடம் விரிசல் ஏற்பட்டு பழுதடைந்தும் தரைதளம் மற்றும் கான்கிரீட் மேல்தளங்கள் இடிந்து விழும் அபாயகரமான நிலையில் உள்ளதால் இக்கட்டடத்தை இடித்துவிட்டு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் புதிய பள்ளி கட்டடங்கள் (G+2) கட்ட ரூ.215 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. திட்ட பணியினை துவங்க வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு பள்ளிக்கட்டடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 18.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.43/2024ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**ந.து.ந.க.எண்.D1/SD/WDCN14/00701/2024**
**ஆணையர் அவர்களின் 14.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:374/2024** **பொருள் எண்.55**

## தானப்பத்திரம்

மண்டலம்-14, கோட்டம்-181ல் M/s. Young Men's Christian Association Madras rep by their General Secretary & Chief Executive Officer Mr. P. Asir Pandian அவர்கள் S.No.316/1 & 317/24A of Kottivakkam Village, Sholinganallur Taluk, Chennai Districtல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN14/00701/2024, நாள்:11.09.2024ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

இம்மனை உட்பிரிவுக்கான திட்ட அனுமதி ஒப்புதல் உறுப்பினர் – செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களால் Layout-1/0291/2023, நாள்:01.08.2024ன்படி வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காக 840.21ச.மீ மற்றும் 8543.18ச.மீ நிலங்களை முறையே தானமாக தானப்பத்திரம் (ஆவண எண்.2399/2021, dated 08.09.2021 & No.2400/2021 dated 08.09.2021) வழங்கியுள்ளார்கள்.

அரசாணை G.O.Ms.No.181, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் ஏற்கனவே சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் பொது பயன்பாட்டிற்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொண்டதை மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) நிலத்தின் மொத்தப் பரப்பளவு 81615.39 சதுர மீட்டர். விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காக 840.21 ச.மீ நிலம் மற்றும் 8543.18ச.மீ நிலம் ஆகியவற்றை முறையே தானப்பத்திரம் மூலம் (ஆவண எண்.No.2399/2021 dated 08.09.2021 & No.2400/2021 dated 08.09.2021) வழங்கியுள்ளார்கள். தற்போது விண்ணப்பதாரர்களாகிய M/s. Young Men's Christian Association Madras rep by their General Secretary & Chief Executive Officer Mr.P.Asir Pandian அவர்கள் தற்போது கூடுதலாக பொது பயன்பாட்டிற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 371.50சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சார் பதிவாளர், அடையார் அலுவலகத்தில் பத்திர பதிவு எண்.2314/2024,நாள்: 24.07.2024ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது..

(ஆ) பொது பயன்பாட்டிற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 371.50சதுர மீட்டர் நிலத்தை விண்ணப்பதாரர்கள் M/s. Young Men's Christian Association Madras rep by their General Secretary & Chief Executive Officer Mr.P.Asir Pandian அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு இருக்கும் நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, S.No.316/1 & 317/24A of Kottivakkam Village, Sholinganallur Taluk, Chennai District, Division - 181, Zone - 14ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி சமர்ப்பித்த வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பொது பயன்பாட்டிற்கான 371.50 சதுர மீட்டர் நிலத்தை M/s.Young Men's Christian Association Madras rep by their General Secretary & Chief Executive Officer Mr.P.Asir Pandian அவர்களிடமிருந்து சார்பதிவாளர், அடையார் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் பதிவு எண்.2314/2024, நாள்:24.07.2024ன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்கப்பட்ட நிலத்திற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.09.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.62/2024, நாள்.23.09.2024ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5சு.து.ந.க.எண்.எச்2 / 1818 / 2024**
**ஆணையர் அவர்களின் 22.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:375 / 2024** **பொருள் எண்.56**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்– 5 - சுகாதாரத்துறை - கோட்டம் - 49 முதல் 63 வரையுள்ள கோட்டங்களில் 01.10.2023 முதல் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள 141 உறுப்பினர்களைக் கொண்ட 11 சுய உதவி குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் வழியாக சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது - இப்பணிக்காலம் 29.09.2024 அன்றுடன் முடிவடைகிறது - 141 + 6 = 147 உறுப்பினர்களைக் கொண்ட 11 சுயஉதவி குழுக்களின் பணிக்காலத்தை 01.10.2024 முதல் 30.09.2025 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ள அனுமதி.**

கூடுதல் தலைமை செயலாளர்/ஆணையர் அவர்களின் 21.11.2023 நாளிட்ட ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்-5, கோட்டம்-*49* முதல் 63 வரை உள்ள கோட்டங்களில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம், கொசு மருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மற்றும் சுகாதார பணிகளை மேற்கொள்ளவும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் வழியாக சுகாதார பணிக்காக 125 நபர்கள் மற்றும் ரிப்பன் மாளிகை, பணிக்காக 16 நபர்கள் மொத்தம் 141 பணியாளர்களை **(01.10.2023 முதல் 29.09.2024 வரை)** ஒர் ஆண்டு காலத்திற்கு தற்காலிக தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்தவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதற்கென மன்றத் தீர்மான எண்.598/2023, நாள்.29.11.2023-ன்படி மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்-5, கோட்டம்–*49* முதல் 63 வரை உள்ள கோட்டங்களில் பணிபுரியும் *4*ம் நிலை நிரந்தர பணியாளர்களாக பணிபுரியும் பணியாளர்களில் வயது முதிர்வு ஓய்வு பெற்ற *6* பணியாளர்களும், பணியின் போது காலமான *15* பணியாளர்களும் மொத்தம் *21* பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் அவர்கள் மேற்கொண்ட சுகாதாரப் பணிகளில் சுணக்கம் ஏற்பட்ட காரணத்தினால் *21 NULM* மாற்றுப் பணியாளர்கள் கேட்டு கூடுதல் தலைமை செயலாளர் / ஆணையர் அவர்களுக்கு கோப்பு அனுப்பப்பட்டது. அக்கோப்பின் இறுதியாணையாக *6 NULM* மாற்றுப் பணியாளர்களை பணி அமர்த்திக் கொள்ளவும், தற்போது இந்திய தேர்தல் ஆணையத்தின் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருப்பதால் இந் நன்னடத்தை விதிகள் தேர்தல் ஆணையத்தால் விளக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் இப் பணியிடங்களை நிரப்பப்படலாம், மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், இக்கோப்பின் மீது, மன்றத்தின் பின்னேற்பினை பின்னர் பெறப்படவேண்டும். என்ற நிபந்தனையின் அடிப்படையில், இந்நேர்விற்கு நிர்வாக மற்றும் நிதி அனுமதி வேண்டி *(Administrative and Financial Sanction)* கூடுதல் தலைமை செயலாளர் / ஆணையர் அவர்களால் 05.06.2024 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம்-5க்குட்பட்ட எல்லையில் இயங்கி வரும் தலைமை செயலகம், கலைவாணர் அரங்கம் ரிப்பன் மாளிகை, உயர்நீதி மன்றம், காவல் ஆணையர் அலுவலகம், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, எழும்பூர் அரசு கண் மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனை, ஒமந்தூரார் பல்நோக்கு அரசு பொது மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, டாக்டர்.எம்.ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை அரசு அலுவலகங்கள் இயங்கி வருவதால், பொது சுகாதாரப்பணிகளில் தனிக்கவனம் செலுத்தும் வகையில், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் இப்பணிகளை தொடர வேண்டியுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை துறையின் சுற்றறிக்கை தி.க.மே.து.ந.க.எண்.அ3/3974/2023, நாள:29.07.2024-ன்படி, 2024-2025 ஆம் ஆண்டுக்கான குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.753/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியாளர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | 01.10.2024 முதல் 30.09.2025வரை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 141 | ரூ.753/- | 365 நாட்களுக்கு | ரூ. 3,87,53,145/- |
| 2. | 06 | ரூ.753/- | 365 நாட்களுக்கு | ரூ. 16,49,070/- |
| மொத்தம் | 147 | ரூ.753/- | 365 நாட்களுக்கு | ரூ. 4,04,02,215/- |

அதனடிப்படையில் 01.10.2024 முதல் 30.09.2025 வரை ஓராண்டு காலத்திற்கு 147 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.753/- வீதம், 753 X 365 X 147 = ரூ.4,04,02,215/- (ரூபாய். நான்கு கோடியே நான்கு இலட்சத்து இரண்டாயிரத்து இருநூற்று பதினைந்து மட்டும்) தேவைப்படுவதால் இத்தொகையை கணக்கு குறியீடு எண். 30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண். 210-100-602 தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளலாம்.

எனவே,

1) மண்டலம்-5ல் தற்காலிக பணியில் உள்ள சுகாதாரப் பணியாளர்கள் 141+6=147 நபர்களை சுய உதவிக் குழுக்களின் மூலம் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை துறையின் 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின்படி (தி.க.மே.து.ந.க.எண்.அ3/3974/2023) குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.753/- ஊதியத்தின் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு 01.10.2024 முதல் 30.09.2025 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,
2) தற்காலிகமாக பணியமர்த்தப்படும் 147 பணியாளர்களுக்கு, நடப்பு நிதியாண்டில் 2024-2025ல் ஓராண்டு காலத்திற்கு 01.10.2024 முதல் 30.09.2025 வரை ஆகும் ஊதிய செலவினத் தொகையான நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.753/- வீதம், 753 X 365 X 147 = ரூ. 4,04,02,215/- (எழுத்தால் நான்கு கோடியே நான்கு இலட்சத்து இரண்டாயிரத்து இருநூற்று பதினைந்து மட்டும்) கணக்கு குறியீடு எண்.30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண். 210-100-602 ல் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய, நிதி நிர்வாகப் பிரிவுக்கு அனுமதியும்,
3) தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் (ம) தொழிலாளர் நலன் மற்றும் திறன் பேம்பாடு (J1) துறை, அரசாணை 2(D) எண்: 36 நாள்: 16.06.2023-* பெருநகர சென்னை மாநகராட்சியில் அமல்படுத்தவும் மற்றும் அரசிதழில் குறிப்பிட்டுள்ளவாறு தினக்கூலி பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் Explanations || (1) ii-ன்படி முந்தைய ஆண்டின் சராசரி (Consumer Price Index) அடிப்படையில் அகவிலைப்படி உயர்த்தி ஏப்ரல் முதல் நாளிலிருந்து ஊதியம் வழங்க அனுமதியும்,
4) மேற்கண்ட 147 சுகாதாரப் பணியாளர்களை பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வழியாக சுகாதாரப் பணிகளை ஓராண்டு காலத்திற்கு 01.10.2024 முதல் 30.09.2025 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.96/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.172/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.6நக.எண்.அ11/ 1452 /2024**
**ஆணையர் அவர்களின் 22.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:376/2024** **பொருள் எண்.57**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 6 (திரு.வி.க. நகர்) - கோட்டம்-64 முதல் 78 வரை அண்டை வீட்டு குழுவின் கீழ் (SHG) சுகாதார களப்பணியில் பணி புரிந்து வந்த 95 சுகாதார களப்பணியாளர்களின் பணி காலம் 29.09.2024 உடன் முடிவடைகிறது 01.10.2024 முதல் 30.09.2025 வரை ஓர் ஆண்டிற்கு சுகாதார களப்பணிகளை மேற்கொள்ள 95 எண்ணிக்கையிலான 6 குழு உறுப்பினர்களை தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -6 கோட்டங்கள் - 64 முதல் 78 வரையுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வீட்டில் உள்ள நீர்த் தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல் நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் கொசுப்புழு தடுப்பு பணி மேற்கொண்டு கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்கன் குன்யா, யானைக்கால் மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்தவும், நீர் வழித்தடங்கள், மழைநீர்க் கால்வாய்கள், பக்க கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கவும், புகை பரப்பும் பணி மேற்கொள்ளவும், நிரந்தர பணியாளர்களின் பற்றாகுறை காரணமாக கோட்டம் -64 முதல் 78 வரையிலான 15 கோட்டங்களுக்கு 30.09.2023 முதல் 29.09.2024 வரை சுகாதார களப்பணி *(Health Workers)* மேற்கொள்ள 95 எண்ணிக்கையிலான *NULM* குழு உறுப்பினர்கள் பணிபுரிய நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அப்பணிகாலம் 29.09.2024 அன்றுடன் முடிவடைகிறது. அப்பணியாளர்களுக்கு மாநகர நல அலுவலர் அவர்களின், 30.10.2023 நாளிட்ட சுற்றறிக்கையின்படி தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.687/- அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மண்டலம்-*6*ல் மொத்தம் *84,455* வீடுகள் உள்ளன. இவ்வீடுகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகள், கீழ்நிலைத் தொட்டிகள், மற்றும் கிணறுகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப் புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் சுகாதார களப்பணி மேற்கொள்ள *95* எண்ணிக்கையிலான சுகாதார பணியாளர்களும் கோட்டங்கள் 70,71,72,73,74, மற்றும் 75ல் *15*-கி.மீ நீளமுள்ள நீர் வழித்தடத்தில் உள்ள குப்பைகள் மற்றும் செடிகளை அகற்றி மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள கால்வாய்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, மழைநீர்க் கால்வாய் மற்றும் பக்க கால்வாய் என மொத்தம் *140*.கி.மீ இவற்றில் மருந்து தெளிப்பு பணி மேற்கொள்ள *4* மருந்து தெளிக்கும் பணியாளர்களுக்கும் மற்றும் புகை மருந்து பரப்பும் பணி மேற்கொள்ள *5* பணியாளர்களும் ஆக மொத்தம் 95 எண்ணிக்கையிலான தற்காலிக பணியாளர்கள் *01.10.2024* முதல் *30.09.2025* சுகாதார களப்பணி மேற்கொள்ள தேவைப்படுகின்றது .

| அட்டவணை -*I* - சுகாதார களபணியாளர்களின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| கோட்டம் | சுகாதார பணியாளர் எண்ணிக்கை | பணியாளர்களின் விவரம் | | | |
| | | செக்டார்களின் பணியாளர்களின் எண்ணிக்கை | மருந்து தெளிக்கும் பணியாளர்களின் எண்ணிக்கை | புகை மருந்து பரப்பு பணியாளர்களின் எண்ணிக்கை | பக்க கால்வாய்களில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை |
| 64 | 8 | 6 | - | 1 | 1 |
| 65 | 13 | 11 | 1 | - | 1 |
| 66 | 7 | 5 | 1 | 1 | - |
| 67 | 6 | 5 | - | - | 1 |
| 68 | 9 | 8 | - | 1 | - |
| 69 | 3 | 3 | - | - | - |
| 70 | 6 | 5 | 1 | - | - |
| 71 | 5 | 5 | - | - | - |
| 72 | 6 | 6 | - | - | - |
| 73 | 7 | 5 | - | 1 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 74 | 3 | 2 | - | - | 1 |
| 75 | 6 | 6 | - | - | - |
| 76 | 7 | 6 | 1 | - | - |
| 77 | 4 | 4 | - | - | - |
| 78 | 5 | 4 | - | 1 | - |
| **மொத்தம்** | 95 | 81 | 4 | 5 | 5 |

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் அவசரம் மற்றும் அவசியம் கருதி சுகாதார களப்பணிகளை அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள் (SHG) மூலம் மேற்கண்ட அளவில் நியமித்து பணி மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது. திடக்கழிவு மேலாண்மை துறை, 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் சுகாதார பணியாளர்களுக்கு (Health Workers) நாள் ஒன்றுக்கு ரூ.753/- என்ற அடிப்படையில் மண்டலம்-6ன் மூலம் 365 நாட்களுக்கு அண்டை வீட்டு குழுவின் கீழ் உறுப்பினர்களை சுகாதார கள பணியில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி விவரம் | தேவைப்படும் சுகாதார கள பணியாளர்களின் எண்ணிக்கை | 29.07.2024 திடக்கழிவு மேலாண்மை துறை சுற்றறிக்கை படி தினக்கூலி நாள் ஒன்றுக்கு | தோராய செலவினம் |
|---|---|---|---|---|
| 1. | கொசுப்புழு தடுப்பு பணி மருந்து தெளிப்புப் பணி புகைப்பரப்பும் பணி, நீர் வழித்தடப் பணிகள் | 95-நபர்கள் | ரூ .753/- | ரூ.753 X 95 (பணியாளர்கள்) X 365 நாட்கள் ரூ. **2,61,10,275/-** |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் சுகாதார பணியாளர்களைக் கொசுப் புழு தடுப்பு பணி, மருந்து தெளிப்புப் பணி, புகை மருந்து தெளிப்புப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் – 6 ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை துறை, 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் 95 எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கான ஒரு வருடத்திற்கான தோராய செலவு ரூ.753 x 95 (பணியாளர்கள்) X 365 (நாட்கள்) என ஓர் ஆண்டிற்கு ரூ.2,61,10,275/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து ஒரு இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்று எழுபத்து ஐந்து மட்டும்) என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-6, கோட்டம்-64 முதல் 78 வரை உள்ள தற்காலிக சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 29.09.2024 அன்றுடன் முடிவடைந்து விடுவதால் 01.10.2024 முதல் 30.09.2025 வரை ஓராண்டு காலத்திற்கு சுகாதார கள பணியில் அண்டை வீட்டு குழு மூலம் பணியாளர்கள் ஈடுபடுத்தவும்.
2. தற்காலிக சுகாதார பணியாளர்களுக்கான ஊதியத்தை 365 நாட்களுக்கு 29.07.2024 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறையின் சுற்றறிக்கையின் படி நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.753/- வீதம் 95 தற்காலிக பணியாளர்களுக்கு ஆகும் செலவினம் 365 x 95 x 753 = ரூ.2,61,10,275/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து ஒரு இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்று எழுபத்து ஐந்து மட்டும்) வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,
3. அண்டை வீட்டு குழு மூலம் சுகாதார களபணியில் ஈடுபட்டு வரும் பணியாளர்களை தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை பணியிலிருந்து நீக்கி மாற்று பணியாளர்களை மண்டல அலுவலர்-6 அவர்களின் அனுமதியுடன் சேர்க்கவும்,

4. சுகாதார கள பணியில் ஈடுபடும் அண்டை வீட்டு குழு மூலம் தற்காலிக பணியாளர்களுக்கு பணி செய்த நாட்களுக்கு மட்டும் மண்டல நல அலுவலர் - 6 அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கவும்,
5. இப்பணிக்கான செலவீன தொகையை (கணக்கு தலைப்பு எண் குறியீட்டு எண். 30-32-02 கணக்கு குறியீட்டு எண்: 210-10-06-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும், மண்டலம்-6 ல் சுகாதார பணியை மேற்கொள்ள அண்டை வீட்டு குழு மூலம் தற்காலிக சுகாதார பணியாளர்களுக்கு தினக்கூலி ரூ.753/- என வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.97/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.173/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1/5003-1/2024**

**ஆணையர் அவர்களின் 24.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 377 / 2024** **பொருள் எண்.58**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னைப் பள்ளிகளில் 2024-2025 ஆம் கல்வியாண்டில் 58 தற்காலிக அலுவலக உதவியாளர்களை பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்தப்பட்டது - மேலும் கூடுதலாக 19 தற்காலிக அலுவலக உதவியாளர்களையும் பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்தும் பள்ளிகளுக்கு கல்வி அலுவலர் மூலம் ஊதியம் வழங்குவதற்கு அனுமதி.**

கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.06.2024 நாளிட்ட ஆணையின் படியும், மன்றத்தின் தீர்மான எண்.162/2024, நாள். 24.06.2024ன் படியும் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பள்ளிகளில் மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் 58 அலுவலக உதவியாளர்கள் பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பள்ளிகளுக்கு கூடுதலாக தேவைப்படும் அலுவலக உதவியாளர்கள் தொடக்கம் மற்றும் நடுநிலைப் பள்ளியிலிருந்து 19 அலுவலக உதவியாளர்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்டனர். தற்போது தொடக்கப்பள்ளிகளிலும், நடுநிலைப்பள்ளிகளிலும் அலுவலக உதவியாளர்கள் பணியிடமாற்றம் தேவைப்படுவதால் 19 அலுவலக உதவியாளர்கள் தொடக்கம் மற்றும் நடுநிலைப்பள்ளிகளிலேயே பணியமர்த்தப்படவுள்ளனர். எனவே, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் மாணவர்கள் நலன் கருதியும், தொடக்கநிலை, நடுநிலை, மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் பணிகள் தொய்வில்லாமல் நடக்கவும், கூடுதலாக 19 அலுவலக உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 27.06.2024 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி ஊதியம் 2024-2025 ஆம் கல்வியாண்டில் நாளொன்றுக்கு ரூ.499/-வீதம் பள்ளி வேலை நாட்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளதற்கிணங்க ஊதியம் உயர்த்துவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. 2024-2025 ஆம் கல்வியாண்டில் செப்டம்பர்-2024 முதல் ஏப்ரல்-2025 வரை 2024-2025 ஆம் கல்வியாண்டில் 58 தற்காலிக அலுவலக உதவியாளர்களுக்கு மற்றும் கூடுதலாக பணியமர்த்தப்படும் 19 அலுவலக உதவியாளர்கள் சேர்த்து 77 நபர்களுக்கு ஆகும் செலவினம் (77 x 26 x 499 x 8) = ரூ.79,91,984/- (ரூபாய் எழுபத்தி ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்றாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி நான்கு மட்டும்)-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்படி 19 அலுவலக உதவியாளர்கள் பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்த அனுமதியும்,

3. மேற்படி *19* அலுவலக உதவியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை கல்வி அலுவலர் மூலமாக வழங்க அனுமதியும்,
4. மேற்குறிப்பிட்ட செலவினங்களுக்குரிய தொகையான *(77 x 26 x 499 x 8) =* ரூ.*79,91,984/-* (ரூபாய் எழுபத்தி ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்றாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி நான்கு மட்டும்)-க்கு கணக்கு குறியீடு எண். *80-82-01, 230-11-02-02* கல்வி செலவீனங்கள் என்கிற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் கல்வி அலுவலர் வாயிலாக செலவீனம் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 18.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.36/2024ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.176/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1 / 5004-3 / 2024**
**ஆணையர் அவர்களின் 25.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:378 / 2024** **பொருள் எண்.59**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னைப் பள்ளிகளில் 2024-2025 ஆம் கல்வியாண்டில் 476 தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்தப்பட்டது - மேலும் கூடுதலாக 73 தற்காலிக பாதுகாவலர்கள் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2024-25 சந்தை விலை அடிப்படையில் (GST 18% ) உடன் பணியமர்த்த அனுமதி.**

கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.06.2024 நாளிட்ட ஆணையின் படியும், மன்றத்தின் தீர்மான எண்.159/2024, நாள்.24.06.2024ன் படியும் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை தொடக்கம், நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 476 தற்காலிக பாதுகாவலர்கள் பள்ளி மேலாண்மைக்குழுவின் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி, பள்ளிகளுக்கு கூடுதலாக தேவைப்படும் பாதுகாவலர்கள் சென்னை தொடக்கம், நடுநிலை பள்ளிகளிலிருந்து 73 தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்தப்படவுள்ளனர். எனவே, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் மாணவர்கள் நலன் கருதியும் தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணிகள் தொய்வில்லாமல் நடக்கவும், கூடுதலாக 73 தற்காலிக பாதுகாவலர்கள் தேவைப்படுகின்றனர்.

சென்னை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் 27.06.2024 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி 2024-2025 சந்தை விலைப்படி ஊதியம் நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

**தற்காலிக பாதுகாவலர்களுக்கு செப்டம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025 மாதம் வரை 242 நாட்களுக்கு) ஊதியம் வழங்கப்பட வேண்டிய விவரம்**

| வ. எண் | பள்ளிகளின் விவரம் | பணியாளர்களின் எண்ணிக்கை | செப்டம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025 (242 நாட்கள்) | நாள் ஒன்றுக்கு | மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை தொடக்கம்/ நடுநிலைப் பள்ளிகள் | 308 | 242 நாட்கள் | 524/- | ரூ.3,90,56,864/- |
| 2. | சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் | 168 | 242 நாட்கள் | 524/- | ரூ.2,13,03,744/- |
| 3. | சென்னை தொடக்கம் மற்றும் நடுநிலைப் பள்ளிகள் | 73 | 242 நாட்கள் | 524/- | ரூ.92,56,984/- |
| | | 549 | | | ரூ.6,96,17,592/- |
| | GST 18% | | | | ரூ.1,25,31,166/- |
| மொத்தம் | | | | | ரூ.8,21,48,758/- |

எனவே, *476* தற்காலிக பாதுகாவலர்கள் மற்றும் கூடுதலாக பணியமர்த்தப்படும் *73* தற்காலிக பாதுகாவலர்களுக்கு சேர்த்து *549* நபர்களுக்கு கீழ்கண்ட விவரப்படி பணியமர்த்த அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் சந்தை விலை அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்யவும்

1. *2024-2025* ஆம் கல்வியாண்டில் செப்டம்பர் *2024* முதல் ஏப்ரல் *2025* வரை *476* தற்காலிக பாதுகாவலர்கள் மற்றும் கூடுதலாக *73* தற்காலிக பாதுகாவலர்கள் சேர்த்து *549* தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஆகும் செலவினம் *549 x 242 x 524 =* ரூ.*6,96,17,592/- + GST 18%* தொகை ரூ.*1,25,31,166/-* ஆக மொத்தம் தொகை ரூ.*8,21,48,758/-* க்கு நிர்வாக அனுமதியும்,

2. ஏற்கனவே பணிபுரியும் *476* பாதுகாவலர்களை வயது மற்றும் உடற்தகுதியின் அடிப்படையில் மேற்கண்ட ஊதியத்திற்கு மீண்டும் பணிநியமனம் செய்யவும்,

3. கூடுதலாக *73* பாதுகாவலர்களை மேற்கண்ட ஊதியத்திற்கு பணியமர்த்திவும்,

4. இத்தொகையை தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீட்டு எண். *80-82-07,*
   *220-11-03-11 Security Expenses* என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் பெறுவதற்கும் மற்றும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீடு எண். *80-82-01, 220-11-03-12 Security Expenses* என்ற நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 18.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.37/2024ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.177/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1/5005-1/2024**
**ஆணையர் அவர்களின் 24.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:379 / 2024** **பொருள் எண்.60**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னைப் பள்ளிகளில் 2024-2025 ஆம் கல்வியாண்டில் 183 தற்காலிக முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டது - கூடுதலாக 23 தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அக்டோபர் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை SMC மூலம் பள்ளிகளுக்கு வழங்குவதற்கு அனுமதி.**

கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.06.2024 நாளிட்ட ஆணையின் படியும், மன்றத் தீர்மான எண்.158/2024, நாள்.24.06.2024ன்படியும் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னைப்பள்ளிகளில் மேல்நிலைப்பள்ளிகளில் 183 தற்காலிக முதுகலைப்பட்டதாரிகள் பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், சென்னைப் பள்ளிகளுக்கு கூடுதலாக தேவைப்படும் 23 தற்காலிக முதுகலைப்பட்டதாரிகள் தேவைப்படுவதால் மேல்நிலைப் பள்ளிகளில் பணியமர்த்தப்படவுள்ளனர். எனவே, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் மாணவர்கள் நலன் கருதியும், மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் பணிகள் தொய்வில்லாமல் நடக்கவும், கூடுதலாக 23 தற்காலிக முதுகலைப்பட்டதாரிகள் தேவைப்படுகின்றனர்.

| வ. எண் | உதவி கல்வி அலுவலர் | கூடுதலாக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படும் பள்ளிகள் | பாடம் | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | No Need | - | - | - |
| 2 | 2 | சென்னை மேல்நிலைப்பள்ளி லஷ்மி புரம் | பொருளாதாரம் | 1 | 1 |
| 3 | 3 | சென்னை மேல்நிலைப்பள்ளி பட்டேல் நகர் | தமிழ் | 1 | 1 |
| 4 | 4 | சென்னை மேல்நிலைப்பள்ளி அப்பாசாமி லேன் | கணிப்பொறி அறிவியல் | 1 | 1 |
| 5 | 5 | சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி M.H. ரோடு | பொருளாதாரம் | 1 | 2 |
| | | | தமிழ் | 1 | |
| 6 | 6 | No Need | - | - | - |
| 7 | 7 | சென்னை மேல்நிலைப்பள்ளி அயனாவாரம் | தமிழ் | 1 | 2 |
| 8 | | | ஆங்கிலம் | 1 | |
| 9 | | சென்னை மேல்நிலைப்பள்ளி புல்லா அவின்யு | வரலாறு | 1 | 1 |
| 10 | 8 | சென்னை மேல்நிலைப்பள்ளி ஆழ்வார்பேட்டை | கணக்கியல் | 1 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | | சென்னை மேல்நிலைப்பள்ளி விருகம்பாக்கம் | பொருளியல் | 1 | 1 |
| 12 | | சென்னை மேல்நிலைப்பள்ளி நெசப்பாக்கம் | வணிகவியல் | 1 | 2 |
| 13 | | | கணிப்பொறி அறிவியல் | 1 | |
| 14 | 9 | சென்னை மேல்நிலைப்பள்ளி *M.G.R* நகர் | கணிப்பொறி அறிவியல் | 1 | 1 |
| 15 | | சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சைதாப்பேட்டை | கணிதம் | 3 | 3 |
| | | | கணிப்பொறி அறிவியல் | | |
| | | | வணிகவியல் | | |
| 16 | | சென்னை மேல்நிலைப்பள்ளி மடுவின்கரை | பொருளியல் | 1 | 3 |
| 17 | | | கணிப்பொறி அறிவியல் | 1 | |
| 18 | 10 | | வணிகவியல் | 1 | |
| 19 | | சென்னை மேல்நிலைப்பள்ளி வேளச்சேரி | கணிதம் | 1 | 1 |
| 20 | | சென்னை மேல்நிலைப்பள்ளி திருவான்மியூர் | பொருளியல் | 1 | 2 |
| 21 | | | வரலாறு | 1 | |
| 22 | | சென்னை மேல்நிலைப்பள்ளி தரமணி | பொருளியல் | 1 | 1 |
| | | மொத்தம் | | | 23 |

எனவே,

1. 2024-2025 ஆம் கல்வியாண்டில் அக்டோபர்-2024 முதல் ஏப்ரல்-2025 வரை கூடுதலாக 23 தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் பணியமர்த்த ஆகும் செலவினம் 23 x 7 x 18,000 = ரூ.28,98,000/- க்கு (ரூபாய் இருபத்தி எட்டு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,

2. மேற்படி 23 தற்காலிக முதுகலைப்பட்டதாரிகள் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்த அனுமதியும்,

3. மேற்படி23 தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் வழங்கப்படும் மதிப்பூதியம் கல்வி அலுவலர் மூலமாக வழங்க அனுமதியும்,

4. மேற்குறிப்பிட்ட செலவினங்களுக்குரிய தொகையான (23 x 7 x 18,000) ரூ.28,98,000/- க்கு (ரூபாய். இருபத்தி எட்டு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்) கணக்கு குறியீடு எண். 80-82-01, 230-11-02-02 கல்விச் செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 18.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.38/2024ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.178/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண்.அ 1 / 8478-1 / 2024**
**ஆணையர் அவர்களின் 24.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:380 / 2024** **பொருள் எண்.61**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னைப் பள்ளிகளில் 2024-2025 ஆம் கல்வியாண்டில் 60 தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் 137 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டது - கூடுதலாக 63 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் ஆகஸ்ட் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை பணியமர்த்த அனுமதி.**

ஆணையர் அவர்களின் 26.07.2024 நாளிட்ட ஆணையின் படியும் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னைப்பள்ளிகளில் தொடக்கநிலை, நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் 60 தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் 137 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பள்ளிகளுக்கு கூடுதலாக 63 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் பணியமர்த்தப்படவுள்ளனர். எனவே, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் மாணவர்கள் நலன் கருதியும், சென்னைப்பள்ளிகளில் தொடக்கநிலை, நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் பணிகள் தொய்வில்லாமல் நடக்கவும், கூடுதலாக 63 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

எனவே,

1. 2024-2025 ஆம் கல்வியாண்டில் ஆகஸ்ட்-2024 முதல் ஏப்ரல்-2025 வரை கூடுதலாக 63 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் பணியமர்த்த ஆகும் செலவினம் (63 x 15000 x 9) ரூ.85,05,000/- க்கு (ரூபாய் எண்பத்தி ஐந்து இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,
2. மேற்படி கூடுதலாக 63 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்த அனுமதியும்,
3. மேற்படி கூடுதலாக 63 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் வழங்கப்படும் மதிப்பூதியம் கல்வி அலுவலர் மூலமாக வழங்க அனுமதியும்,
4. மேற்குறிப்பிட்ட செலவினங்களுக்குரிய தொகையினை கூடுதலாக 63 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் பணியமர்த்த ஆகும் செலவினம் (63 x 15000 x 9) = ரூ.85,05,000/- க்கு (ரூபாய் என்பத்தி ஐந்து இலட்சத்து மற்றும் ஐந்தாயிரம் மட்டும்) கணக்கு குறியீடு எண். 80-82-01, 230-11-02-02 கல்விச்செலவினங்கள் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 18.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.39/2024ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.179/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**S.W.M.C.No.A7/5723/2024**

**ஆணையர் அவர்களின் 26.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:381/2024** **பொருள் எண்.62**

**Greater Chennai Corporation – Solid Waste Management Department – Illegal dumping of Construction & Demolition waste – To allow private lorry owners / agencies who involved in collection and transportation of C&D waste to dump the waste in designated locations of GCC – To implement a system to avoid illegal dumping – For Approval.**

Chennai Region C&D Waste Vehicle Owners Association Letter dated. 19.09.2024, has stated that they were being involved in the clearing of debris generated out of Houses, Shopping complexes, IT companies, Apartments, Private Hospitals etc. during construction/alterations for over 25 years. Also, stated that due to implementation of rules and regulations by the GCC to avoid illegal dumping, their livelihood was affected and requested to allocate space for dumping of debris.

Greater Chennai Corporation is spread across an area of about 426 sqkm and consists of 15 zones with 21,21,466 individual households within the Chennai city limits, generating an average municipal solid waste of about 6150 MT per day andconstruction & demolition waste of about 850 MT per day. In compliance with the Solid Waste Management Rules, 2016, the Greater Chennai Corporation has established various processing plants for processing wet, dry & c&d waste and various proposals are in pipeline.

In line with SWM Rules, 2016 GCC has established construction and demolition waste processing plants at Perungudi and Kodungaiyur at a capacity of 400 MT per day each. The collection and transportation of C&D waste in Zones-4, 5, 6, 8, 9, 10 & 13 are being carried out by private agency M/s.Premier Precision Surface which collects, transports and processes it at the Perungudi and Kodungaiyur plants. The waste collected from the remaining eight zones is transported directly by GCC to low lying areas and some other needy places.

According to Construction & Demolition Waste Management Rules, 2016 the disposal of construction debris lies with the person or entities generating the waste. In GCC limits, unauthorized debris lying on roads is being cleared by GCC, whereas the C&D waste generated from individual houses and commercial establishments are not cleared by GCC since the responsibility for clearing such waste lies with them only.

In most cases, the C&D waste is dumped near a waterbody, road, vacant lands and other places to evade the transportation and disposal costs which in-turn results in pollution, environmental degradation and also posing risks to public health.

Further, to prevent people from illegal dumping of C&D waste at public places, GCC levies fine ranging from Rs.2,000/- to Rs.5,000/-. In order to keep the city clean and neat, illegally dumped waste is being cleared by GCC and the continuous monitoring is also being done by GCC to avoid such illegal dumping further.

In view of the facts explained above, it is considered that, allotting designated areas to dump construction waste free of cost is a good move as it will ensure only segregated waste enters the site and the waste can be recycled well. Offering free or subsidized waste services to residents can encourage legal disposal of C&D waste. Accordingly, GCC owned lands situated at Kodungaiyur and Perungudi may be initially earmarked for this purpose. The Private Lorry Owners / Individuals / Agency who are involved in collection and transportation of construction & demolition waste may be allowed to utilize these designated locations to dump the debris subject to terms and conditions mentioned below.

1. Private Lorry Owners / Individuals / Agency who involved in collection and transportation of construction & demolition waste shall submit an application to GCC/SWM department with relevant documents to enroll them in the list for dumping of C&D waste in GCC's designated locations.
2. GCC shall scrutiny the applications and prepare the enrollment list for eligible Private Lorry Owners / Individuals / Agencies.
3. GCC shall issue ID cards to the Eligible Private Lorry Owners / Individuals / Agencies.
4. GCC shall collect Rs.1,000/- as a one time Registration fee from the eligible Private Lorry Owners / Individuals / Agencies for enrolment process.
5. Designated C&D waste dumping locations shall be earmarked by GCC.
6. Private Lorry Owners / Individuals / Agency shall submit the details of their vehicles which are involved in the collection & transportation of C&D waste to GCC and these vehicles only shall be allowed to enter in designated locations.
7. Dumping by unauthorized persons shall not be permitted.
8. Private Lorry Owners / Individuals / Agencies shall make their own transportation arrangements at their own risk and cost.
9. Charges or Payment shall not be collected from Private Lorry Owners / Individuals / Agencies by GCC for dumping the debris.
10. Dumping during night time shall not be permitted.
11. The vehicles shall be permitted to dump the waste at the designated locations after showing the ID cards issued by GCC.
12. Dumping at other than designated locations shall not be permitted.
13. Private Individuals / Agency shall ensure the other waste such as solid waste, hazardous waste, biomedical waste etc. does not get mixed with this C&D waste.
14. Wastes other than C&D waste shall not be permitted to dumped at designated locations.
15. The vehicle operators shall abide by the rules and regulations issued by the GCC officials posted at the dumpsites.
16. Private Individuals / Agencies are strictly prohibited from taking photographs inside the dumpsite and publishing/sharing data.

17. The dumping should be done in the presence of GCC officials.
18. The vehicle operators with their staff should leave the dumping site immediately after dumping the waste. Parking the vehicle and roaming inside the dumpsite is strictly prohibited.
19. Illegal activities inside the dumpsite shall not be permitted.
20. Debris generated within GCC limits shall only be permitted to dump inside the designated locations and the debris generated beyond GCC limits shall not be permitted for which the time-stamped photo (photo with time and location) should be attached.
21. The designated locations may be altered/added as and when as decided by GCC.
22. The permitted vehicle operator & staff are advised to take all precautionary measures and follow the health & safety advice of the GCC staff. The risk and responsibility lies with him/her in the event of any breach.
23. Breach of any above procedures by Private Lorry Owners / Individuals / Agency shall lead to termination of the enrolment.
24. GCC reserves all rights to cancel the enrolment of the individuals / agencies from the GCC list at any point of time without assigning any reasons.

Hence, to implement the above system to streamline the process of disposal of C&D waste at designated locations of GCC free of cost to avoid illegal dumping by the Private Lorry Owners / Individuals / Agencies duly following the above said terms and conditions, Council approval is requested through Standing Committee (Health).

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.98/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**திக.மே.து.ந.க.எண். அ7 / 5785 / 2024**
**ஆணையர் அவர்களின் 26.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 382 / 2024** **பொருள் எண். 63**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - குப்பை மற்றும் கட்டிட இடிபாடு கழிவுகளை விதிமீறி கொட்டுவோருக்கான அபராதத் தொகை - மறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

மத்திய அரசு, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 (1986 ஆண்டின் 29 வது சட்டம்)ன் பிரிவு 3, 6, மற்றும் 25-ன் கீழ் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, திடக்கழிவுகளின் மேலாண்மையினை முறைப்படுத்த, திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016-ஐ இயற்றியுள்ளது.

(மத்திய, 1986 இல் 29) பிரிவுகள் 3, 6, மற்றும் 25 ஆகியவற்றின் அதிகாரங்களை பயன்படுத்தி மத்திய அரசு, நாடு முழுவதும் திடக்கழிவுகளை வரையறுக்கப்பட்ட முறையில் கையாளவும் நிர்வகிக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள், *2016*-ஐ அமல்படுத்தியது.

இவ்வாறே விதிகளை மீறி பொது இடங்களில் குப்பைகள் / கட்டிட இடிபாடு கழிவுகளை கொட்டுவோருக்கு திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள், 2016 அட்டவணை - *4*-ன்படி அவ்விதிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மிகவும் தீவிரமாக பின்பற்றியும் பெருமளவில் அபராதமும் விதிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு விதி மீறி பொது இடங்களில் குப்பைகள் / கட்டிட இடிபாடு கழிவுகளை கொட்டுதல் போன்ற ஒழுங்கற்ற முறையில் திடக்கழிவு மேலாண்மையை சரியாக பின்பற்றாமை என அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. இவை கடந்த 5 வருடங்களாக திருத்தியமைக்கப்படாமல் இருப்பதால் இதனை மறு நிர்ணயம் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1919 மற்றும் விதிகள் 2023ன்படி அட்டவனை *IV*ல் மறுவடிவமைக்கப்பட வேண்டும்.

இதன்படி, அட்டவணை - *IV* பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது.

| வ. எண். | துணைப் பிரிவுகள் / பிரிவு விபரங்கள் | தற்போது உள்ள அபராதம் (ரூபாயில்) | திருத்திய / புதிய அபராதம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பொது மற்றும் தனியார் இடங்களில் தூக்கி எறியப்படும் குப்பைகள் / வாகனங்களில் இருந்து குப்பை கொட்டுதல் | 500.00 | 5000.00 |
| 2. | தரம் பிரிக்கப்படாத கழிவுகளின் வகைகள். | | |
| | அ. தனி நபர் இல்லங்கள் | 100.00 | 1000.00 |
| | ஆ. அடுக்குமாடி குடியிருப்பு / குழு குடியிருப்புகள் | 1000.00 | 5000.00 |
| | இ. பெருமளவு குப்பை உருவாக்குபவர்கள் | 5000.00 | 5000.00 |
| 3. | அங்கீகரிக்கப்படாத பொது இடங்களில் கட்டுமான மற்றும் இடிபாடு கழிவுகளை கொட்டுதல் | | |
| | அ. ஒரு டன் வரை | 2000.00 | 5000.00 |
| | ஆ. ஒரு டன்னுக்கு மேற்பட்டவை | 5000.00 | 5000.00 |
| 4. | தோட்டக்கழிவுகள், மரக்கழிவுகள் பொது இடங்களில் கொட்டுதல் | 200.00 | 2000.00 |
| 5. | குப்பை தொட்டி / கழிவு நீர் பாதை / கால்வாய் / நீர் நிலைகளில் குப்பை கொட்டுதல் | 500.00 | 5000.00 |

| | | | |
|---|---|---|---|
| 6. | திடக்கழிவுகளை எரித்தல் | | |
| | அ. தனியார் இடங்கள் | 500.00 | 5000.00 |
| | ஆ. பொது இடங்கள் | 1000.00 | 5000.00 |
| | இ. வணிக வளாகங்களில் திடக்கழிவு உருவாக்குபவர்களால் குப்பைகளை எரித்தல் | 2000.00 | 5000.00 |
| 7. | மீன், வளர்ப்பு பறவைகள், இறைச்சி கழிவுகள் (வீடுகளை தவிர்த்து) தரம் பிரிக்காமல் கொடுப்பது | 1000.00 | 5000.00 |
| 8. | விற்பனையாளர்கள் / கூவி விற்பவர்கள் / கடை வியாபாரிகள் குப்பை தொட்டி / குப்பை கூடை வைத்து இருக்காமல் இருப்பது | 100.00 | 1000.00 |
| 9. | விற்பனையாளர்கள் / கூவி விற்பவர்கள் தரம் பிரிக்காமல் கொடுப்பது | 200.00 | 2000.00 |
| 10. | எண்ணிலடங்காத மக்கள் சேர்ந்து நடத்தப்படும் நிகழ்ச்சிகள் / பொது நிகழ்ச்சிகள் நடந்த இடங்களில் 12 மணி நேரத்திற்குள் தூய்மைப்படுத்தாமல் வைத்து இருப்பது | 5000.00 | 5000.00 |

எனவே பொது இடங்களில் விதிகளை மீறி குப்பைகள் / கட்டிட இடிபாடு கழிவுகளை கொட்டுவோருக்கான அபராதத் தொகையினை மேற்கண்டவாறு திருத்தியமைக்க, நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.99/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எ.ண்.எல்.இ.1 / 1249 / 2024**

**ஆணையர் (பொ) அவர்களின் 26.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 383 / 2024** **பொருள் எண்.64**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை -சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மேம்படுத்துதல் / திட்டப்பணிகள் செயல்படுத்துதல் - சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு உள்நுழைவு அனுமதி (Enterupon Permission) வழங்க மன்றத்தின் அனுமதி.**

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடிதத்தில் 21.06.2024 அன்று நடைபெற்ற 2024 -2025 ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்ட தொடரில் 19 இடங்களில் பல்வேறு நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அறிவித்தது என்றும், அந்த இடங்களில் வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தெரிவிக்கப்பட்ட 19 இடங்களில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள 9 இடங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இருப்பதால், மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மண்டல அலுவலகத்தின் உரிய அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட வடக்கு, மத்திய (ம) தெற்கு வட்டார துணை ஆட்சியர்கள்(நிமஉது), தனிவட்டாட்சியர்கள்(நிமஉது) ஆகியோர்களுடன் கள ஆய்வு செய்து மண்டல அலுவலர்களின் பரிந்துரை அறிக்கையினை வட்டார துணை ஆணையரின் ஒப்புதலுடன் இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு இவ்வலுவலக 12.07.2024 (ம) 23.07.2024 நாளிட்ட கடிதங்கள் மூலம் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

| Sl. No. | Region | CMDA Ann. No | Announcement | Constituency | Zone | Dn. | Survey No | Classification/ Ownership | Enter Upon Area |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Central | 21 | Football ground at Appasamy Street, Chetpet | Thousand lights | 9 | 110 | Block No.19 TS No. 330/3 | Corporation public | 188.6 sq.m. |
| 2 | Central | 22 | Community Hall at Harrington Road, Egmore | Egmore | 8 | 108 | Block No.17 TS No. 249/1 | Corporation public | 1141.3 sq.m |
| 3 | North | 23 | Playground at Moolakothalam, Royapuram | Royapuram | 5 | 53 | Sur No. 2/14 | Corporation public | 0.35 Acres |
| 4 | North | 24 | Dialysis Centre at Chepauk, Royapettah | Chepauk, | 5 | | Block No.13, S.No.372, Sub division-29 | Corporation Private | 0.20 Acres |
| 5 | Central | 25 | Renovation of Amma park, Mettupalayam road. West saidapet | West Saidapet | 10 | 140 | Block No.93 Old S.No.241, TS No. 62Pt, 62/8pt | Sarkar Poromboke | 6656.64 sq.m |
| 6 | Central | 26 | Multipurpose social center at Luz Avenue, Mylapore | Mylapore | 9 | 123 | Block No.71 TS No. 3573/13 | Corporation Private | 731.25 sq.m |
| 7 | Central | 29 | Renovation of Sivan Park and beautifying the junction of P.T. Rajan and P.T. Rajamannar junction, KK Nagar, | Virugam-bakkam | 10 | 136 | Block No.137 Old S.No.394/1 pt TS No. 200 | Rayathvari | 11054 Sq.mt |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | South | 31 | Development of Multipurpose Centre at Balakrishna Street, Adambakkam | Alandur | 12 | 163 | Block No – 18 Old S.NO.184/15 Ts.No.4 Ward (G) | Govt. Poramboke | 0.58 acres |
| 9 | North | 37 | Community Hall at Thiruvottiyur | Thiruvottiyur | 1 | 11 | Block No.24 47/1 | Sarkar Punjai Municipal Hospital & Thiruvottiyur Municipality | 2885 Sqm. |

**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண்.21, சேத்துப்பட்டு, அப்பாசாமி தெரு, கால்பந்து மைதானம் அமைத்தல்**

அறிவிப்பு எண்.21க்கு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் 21.06.2024 நாளிட்ட கடிதம் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம்-*9*, அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-9, கோட்டம்-110, அப்பா சாமி தெரு, சேத்துப்பட்டு, சென்னை – 600 031ல் உள்ள இடம் மொத்த விஸ்தீரணம் 188.60 ச.மீ (2030 ச.அடி) இடம், பிளாக் எண்.19, நகர சர்வே எண்.330/3 நுங்கம்பாக்கம் கிராமம், சென்னை மாவட்டம் வருவாய் பதிவேட்டில் இந்த இடம் கார்ப்பரேசன் பப்ளிக் என்றும்,

<u>இதன் நான்கு எல்லைகள்</u>

வடக்கு: இந்தியன் எக்ஸ்பிரஸ் பில்டிங் சுற்றுச்சுவர்

தெற்கு: சென்னை நடுநிலைப்பள்ளி, அப்பா சாமி தெரு,

கிழக்கு: அப்பா சாமி தெரு

மேற்கு : பொது கழிப்பிடம், பெருநகர சென்னை மாநகராட்சி, அப்பா சாமி தெரு

<u>அளவுகள்</u>

தெற்கு முதல் வடக்கு, கிழக்கு பக்கம்: 9.20 மீ

தெற்கு முதல் வடக்கு, மேற்கு பக்கம்: 9.20 மீ

கிழக்குமுதல் மேற்கு, வடக்கு பக்கம்: 20.50 மீ

கிழக்குமுதல் மேற்கு, தெற்கு பக்கம்: 20.50 மீ

இந்த இடம் மிகவும் சிறிய அளவில் உள்ளதால் பெருநகர சென்னை வளர்ச்சிக்குழுமத்திற்கு கால்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க இயலாது எனவும் சிறுவர் விளையாட்டு மைதானமாக அமைத்துக்கொள்ள உள்நுழைவு அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண்.22, சென்னை எழும்பூர், ஹாரிங்டன் சாலையில் சமுதாய நலக்கூட கட்டிடம் அமைத்தல்**

அறிவிப்பு எண்.22க்கு மண்டலம்-8, மண்டல அலுவலரின் 23.07.2024 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்-8, பகுதி-23, வார்டு-*108*, பிளாக் எண்.17, புல எண்.249/1 (அடங்கல் குறிப்பில் *Corporation Public)* எழும்பூர் கிராமம், சேத்துப்பட்டு, ஹாரிங்டன் சாலையில் அமைந்துள்ள மக்கள் பயன்பாட்டில் உள்ள பழுதடைந்த சமுதாய நலக்கூடத்தின் மொத்த நிலப்பரப்பில் 1,141.30 *Sq.m*ல் உள்ள பழைய கட்டிடத்தை

இடித்துவிட்டு நவீன முறையில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் (CMDA) மூலம் புதியதாக மக்கள் பயன்பாட்டிற்கு சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்ட சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கலாம் என்றும் மேலும் இக்கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் உள்ளவாறு நிலத்தின் பூமிக்கடியில் உள்ள பழைய மழைநீர் வடிகால்வாய் (ஆர்ச் கால்வாய்) கட்டமைப்புகளை சேதப்படுத்தாவண்ணம் அல்லது புதியதாக மழைநீர் வடிகால்வாய் (ஆர்ச் கால்வாய்) கட்டமைப்புகளை அமைக்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்கலாம் என்று பரிந்துரை செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண்.23, இராயபுரம், மூலகொத்தளம் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைத்தல்**

அறிவிப்பு எண்.23க்கு மண்டலம்-5, மண்டல அலுவலரின் 23.07.2024 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-5, வார்டு-53, ல் உள்ள 0.35 ஏக்கர் இடத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்குறிப்பிட்ட 0.35 ஏக்கர் நிலத்தினை 150 எண்ணிக்கையிலான நபர்கள் வசிக்கும் குடியிருப்புகளை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், இந்நிலையில் மாற்று இடம் வழங்கப்பட்ட பின்னர் அவ்விடத்தில் பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியினை மேற்கொள்ள இந்து சமய அறநிலை துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தலைவர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களால் அறிவுறுத்தப்பட்டது என்றும், மேற்குறிப்பிட்ட இடத்தின் விவரங்கள் துணை ஆட்சியர், நிலம் மற்றும் உடைமைத்துறை (வ.வ.அ) அவர்கள் கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார் என்றும்,

| Number | | Govt. Mitta. Zamindari. Inam | Dry, Wet, Unassessed Promboke House Site | Extent by Town Survey | | | Adangal (UDS) Details | How the holding is utilised |
|---|---|---|---|---|---|---|---|---|
| Sur. Field | Sub Div | | | Hectare | Ares | Sq. Mtr. | | |
| 2 | 14 | மாநகராட்சி | பொது உபயோகம் | 0 | 55 | 24.0 | கார்பரேஷன் பப்ளிக் | பால் பண்ணை |

மேற்படி நிலம் மாநகராட்சிக்கு சொந்தமான நிலமாகும் என்றும், சர்வே எண்.2/14ல் 0.35 ஏக்கர் நிலம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும்,

அதன் நான்கு எல்லைகள்

சர்வே எண் 2/14

போலீஸ் குடியிருப்பு வளாகம் (சர்வே எண்.3/1 பகுதி நிலத்திற்கு) - வடக்கு

பேசின் பாலம் சாலை (சர்வே எண்.1 பகுதி நிலத்திற்கு) - தெற்கு

வடக்கு சுவர் சால் (சர்வே எண்.2/15 பகுதி நிலத்திற்கு) - மேற்கு

சர்வே எண்.2/9, 2/10, 2/11 பகுதி நிலத்திற்கு - கிழக்கு

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பால் பண்ணை அமைந்துள்ள 0.35 ஏக்கர் நிலப்பரப்பில் பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் புதிதாக விளையாட்டு மைதானம் கட்டப்பட உள்ளதால், அவ்வாறு கட்டப்படும் விளையாட்டு மைதானத்தை மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 24, சென்னை இராயப்பேட்டை , சேப்பாக்கம் இரத்த சுத்திகரிப்பு மையம் அமைத்தல்**

அறிவிப்பு எண்.24க்கு மண்டலம்-5, மண்டல அலுவலரின் 23.07.2024 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ எண் | பிளாக்எண் (ம) இடம் | சர்வே எண் | உட்பிரிவு எண் | விஸ்தீரணம் | அடங்கல் | பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| *1* | *13* | *372* | *29* | 14 ஏர்ஸ் 93.0 ச.மீ | மாநகராட்சி தனியர் | மாடல் ஸ்கூல் |

இரத்த சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் மாநகராட்சிக்கு சொந்தமான நிலமாகும். இந்நிலத்தில் நகர்புற வீடற்றோருக்கான காப்பக கட்டங்கள் இரண்டு உள்ளது. மேலும், வேம்பு -1, புளி -1 மற்றும் *Rain Tree* -2 மரங்கள் மற்றும் அங்கன்வாடி மையக் கட்டடம் ஒன்றும் உள்ளது என்றும், மீதம் 0.20 ஏக்கர் நிலம் காலியாகவுள்ளது. காலியாக உள்ள நிலம் 22.30 மீட்டர் அகலமும் 33.80 மீட்டர் நீளமும் கொண்டதாகும். இரத்த சுத்திகரிப்பு மையம் அமைக்கும்போது, காப்பகத்திற்கும், சுத்திகரிப்பு மையத்திற்கும் நடந்து செல்ல பாதைக்கு இடம் ஒதுக்கி விட்டு மீதமுள்ள இடத்தில் இரத்த சுத்திகரிப்பு மையம் அமைக்கலாம்.

அதன் நான்கு எல்லைகள் விவரம் பின்வருமாறு:

சர்வே எண். 372/29

*Pycrofts first street* (சர்வே எண் 372/31 பகுதி நிலத்திற்கு) - வடக்கு

சர்வே எண் 375/95 & 134 பகுதி நிலத்திற்கு - தெற்கு

சர்வே எண் 372/20 & 103 பகுதி நிலத்திற்கு - மேற்கு

சர்வே எண் 372/53, 54, 55 & 56 பகுதி நிலத்திற்கு - கிழக்கு

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இரத்த சுத்திகரிப்பு மையம் அமைக்க துணை ஆட்சியர் நிலம் மற்றும் உடமைத்துறை/வ.வ.அ அவர்களால் விஸ்தீரண அளவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும்,

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மாடல் ஸ்கூல் அமைந்துள்ள 14 ஏர்ஸ் மற்றும் 930 ச.மீ நிலப்பரப்பில் 0.20 ஏக்கரில் பெருநகர வளர்ச்சிக்குழுமம் மூலம் புதிதாக இரத்த சுத்திகரிப்பு மையம் கட்டப்பட உள்ளது என்றும், அவ்வாறு கட்டப்படும் இரத்த சுத்திகரிப்பு மையம் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் முடிக்கப்பட்டு நிபந்தனைகளுடன் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 25 மேற்கு சைதாப்பேட்டை, மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூங்காவை புதுப்பித்தல்**

அறிவிப்பு எண்.25க்கு மண்டலம்-10, மண்டல அலுவலரின் 23.07.2024 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மா பூங்கா மேட்டுப்பாளையம் சாலை, மேற்கு சைதாப்பேட்டை விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | அமைவிடம் | சர்வே எண். | வகைப்பாடு/ பரப்பளவு | எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | 140 | அம்மா பூங்கா, மேட்டுப்பாளையம் சாலை, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை -15 | Old S.No.241 T.S.No.62 part, T.S.No.62/8 part, Block No.93 | 6656.64 Sq.Mts. சர்கார் புறம்போக்கு | கிழக்கு - கோடம்பாக்கம் சாலை<br>மேற்கு - சர்வே எண். 68/8 pt<br>வடக்கு - T.S.No.62/1. 65/5. 62/6 (ம) 62/7 pt<br>தெற்கு - மாநகராட்சி பள்ளி |

**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 29 கே.கே.நகர் P.T.ராஜன் மற்றும் P.T.ராஜ மன்னார் சந்திப்பில் உள்ள சிவன் பூங்காவை புதுப்பித்தல் மற்றும் அழகுபடுத்துதல்**

அறிவிப்பு எண்.29க்கு மண்டலம்-10, மண்டல அலுவலரின் 23.07.2024 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவன் பூங்கா மற்றும் P.T.ராஜன் சாலை விவரங்கள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | அமைவிடம் | சர்வே எண். | வகைப்பாடு/ பரப்பளவு | எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | 136 | சிவன் பூங்கா, P.T.ராஜன் சாலை, கே.கே.நகர், சென்னை - 78. | Old S.No.394/1 part T.S.No.200, Block No.0137 | 11054 Sq.Mts. ரயத்துவாரி | கிழக்கு - P.T.ராஜன் சாலை<br>மேற்கு - கன்னிகாபுரம்<br>வடக்கு - P .T.ராஜ மன்னார் சாலை<br>தெற்கு - ராமசாமி சாலை |

மேற்படி சிவன் பூங்காவில் ரூ.9,40,000/- மதிப்பில் ஸ்பாஞ்ச் பார்க் (Spong park) அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், மேலே குறிப்பிட்ட நிலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் மூலம் நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்த உள்நுழைவு அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 26, மயிலாப்பூர் லஸ் அவென்யு பல்நோக்கு சமுதாய கூடம் அமைத்தல்**

அறிவிப்பு எண்.26க்கு மண்டலம்-9, மண்டல அலுவலரின் 23.07.2024 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மயிலாப்பூர், லஸ் அவென்யுவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூட கட்டிடத்தில் விரிசல்கள் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளது என்றும், நிரந்தர நிலப்பதிவேட்டின் படி மேற்படி கட்டிடம் 731.25 ச.மீ (7868.25 ச,அடி) பிளாக் எண்.71, நகர நில அளவை எண்.3573/13, மயிலாப்பூர் கிராமம், சென்னை மாவட்டம் அடங்கலில் மாநகராட்சி தனி என பதிவாகியுள்ளது எனவும், அதன் எல்லைகள்

வடக்கு - கலை மற்றும் ஓவிய கட்டிடம், மாநகராட்சி கட்டிடம்

தெற்கு – *T.S.No. 3573/1, 30* அடி சாலை

கிழக்கு – அங்கன்வாடி மைய கட்டிடம், மாநகராட்சி கட்டிடம்

மேற்கு - நாகேஷ்வர ராவ் பூங்கா, மாநகராட்சி பூங்கா எனவும்,

அளவீடு

தெற்கிலிருந்து வடக்காக கிழக்கு பக்கம் - 22.50 மீ

தெற்கிலிருந்து வடக்காக மேற்கு பக்கம் - 22.50 மீ

கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் - 32.50 மீ

கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் - 32.50 மீ எனவும்,

மேற்குறிப்பிட்ட இடத்தில் பெருநகர வளர்ச்சிக்குழுமம் திட்ட வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 31, ஆதம்பாக்கம் பால கிருஷ்ணா தெருவில் பல்நோக்கு கட்டிடம் அமைத்தல்</u>**

அறிவிப்பு எண்.31க்கு மண்டலம்-12, மண்டல அலுவலரின் 23.07.2024 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருவாய் நில ஆவணங்களில் இந்நிலம் தொடர்பாக கீழ்க்கண்டவாறு பதிவுகள் உள்ளன என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் | வட்டம் | பிளாக் | புல எண் | வகைபாடு | விஸ்தீரணம் | உபயோகம் |
|---|---|---|---|---|---|---|
| சென்னை | ஆலந்தூர் | *18* | *Old.S.No.184/15 T.S.No.4 ward (G)* | அரசு புறம்போக்கு | *0.58* ஏக்கர்ஸ் | பழைய சமூக நலக்கூடம் |

மேற்படி நிலம் அரசு புறம்போக்கு வகைபாடு கொண்ட நிலமாக உள்ளது என்றும் புல எண் *Old.S.No.184/15, T.S.No.4 ward (G)*ல் 0.58 ஏக்கரில் சமூக நலக்கூடம் இடிந்த நிலையில் உள்ளது. அதன் 4 எல்லைகளின் விவரம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - மண்ணடியம்மன் கோயில் 2வது தெரு

தெற்கு - பிள்ளையார் கோயில் தெரு

மேற்கு - தனியார் மனைகள்

கிழக்கு - பாலகிருஷ்ணபுரம் மெயின் ரோடு

மேற்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் உள்கட்டமைப்பு வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், புல எண். *Old.S.No.184/15, T.S.No.4 ward (G)*, மண்டலம்-12, வார்டு-163ல் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு முன் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 37, திருவொற்றியூரில் சமுதாய நலக்கூடம் அமைத்தல்**

அறிவிப்பு எண்.37க்கு மண்டலம்-1, மண்டல அலுவலரின் 23.07.2024 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-3, வார்டு-11 திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் சமுதாய நலக்கூடம் அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்ட நிலம் சர்கார் புஞ்சை வகைப்பாடு செய்யப்பட்டு அடங்கல் கலத்தில் தனிநபர் பெயரில் பதிவாகியுள்ளது என்றும் ஆனால் நிலம் பயன்பாட்டு கலத்தில் மருத்துவமனைகள் (பு.எண்.47/1) மற்றும் பாடசாலை (புல எண்.49) என பதிவாகியுள்ளது எனவும் (புல எண்.47/1)ல் மருத்துவமனை மற்றும் நகராட்சி கடைகள் கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளது எனவும், மீதமுள்ள 2885 ச.மீ நிலம் காலியாகவுள்ளது எனவும், புல எண் 49 மற்றும் 47/1 வழியாக சென்று புல எண்.47/1ஐ அடைய வேண்டியுள்ளது எனவும் காலியாக உள்ள இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்ட உத்தேசிக்கபபட்டுள்ளது எனவும் துணை ஆட்சியர் (நிமஉது) / வடக்கு வட்டார அலுவலகம் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

| *Number* | | *Govt. Mitta. Zamindari inam* | *Dry, Wet, Unassessed, promboke house-sitd* | *Extent by own survey* | | | *Adangal (UDS) Details* | *How the holding is utilized* |
|---|---|---|---|---|---|---|---|---|
| *Sur. Field* | *Sub Div* | | | *Hectare* | *Ares* | *Sq. Mtr.* | | |
| *47* | *1* | சர்க்கார் | புஞ்சை | *0* | *84* | *96.0* | பாலசுந்தர செட்டி ராமநாதன் | மருத்துவ மனைகள் கடைகள் |
| *49* | *0* | சர்க்கார் | புஞ்சை | *0* | *11* | *10.0* | டி.ஷண்முகம், சிபிஎம்சேர்டிங் | பாடசாலை |

மேற்படி நிலம் மாநகராட்சிக்கு சொந்தமான நிலமாகும் என்றும், அதன் நான்கு எல்லைகள் விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வே எண்.47/ 1&49

*Private land* (சர்வே எண்.60) - வடக்கு

*Private land* (சர்வே எண்.18,19,22,28) - தெற்கு

*T.Sunami Hospital* (சர்வே எண். 47/1. 47/2) - மேற்கு

*Private land* (சர்வே எண்.15) - கிழக்கு

மேற்படி புலத்தணிக்கை ஆய்வறிக்கையின்படி திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் மண்டலம்-1, பகுதி-03, வார்டு – 11 பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், திருவொற்றியூர் வார்டு – *027 (Ward – H)*, *Block* – 0024, தெற்கு மாடவீதி *(S.F.No.47/1)* இல் புதிய சமுதாய நல கூடம் கட்டப்படவுள்ள கட்டிடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க முன்நுழைவு அனுமதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் *08.08.2024* நாளிட்ட கடிதத்தில், மேற்படி அறிவிப்புகளுக்கு தடையின்மை சான்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே,

1. **சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண்.21** மண்டலம்-9, கோட்டம்-*110*, அப்பா சாமி தெரு, சேத்துப்பட்டு, சென்னை – 600 031ல் உள்ள இடம் மொத்த விஸ்தீரணம் 188.60 ச.மீ (2030 ச.அடி) இடம், பிளாக் எண்.19, நகர சர்வே எண்.330/3 நுங்கம்பாக்கம் கிராமம், சென்னை மாவட்டம் வருவாய் பதிவேட்டில் இந்த இடம் கார்ப்பரேசன் பப்ளிக் என்றும், இந்த இடம் மிகவும் சிறிய அளவில் உள்ளதால் பெருநகர சென்னை வளர்ச்சிக்குழுமத்திற்கு கால்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க இயலாது எனவும் சிறுவர் விளையாட்டு மைதானமாக அமைத்து மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கவும்,
2. **சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண்.22**: மண்டலம்-8, பகுதி-*23*, வார்டு - 108, பிளாக் எண்.17, புல எண். 249/1 (அடங்கல் குறிப்பில் *Corporation Public)* எழும்பூர் கிராமம், சேத்துப்பட்டு, ஹாரிங்டன் சாலையில் அமைந்துள்ள மக்கள் பயன்பாட்டில் உள்ள பழுதடைந்த சமுதாய நலக்கூடத்தின் மொத்த நிலப்பரப்பில் *1,141.30 Sq.m*-ல் உள்ள பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு (அந்நிலத்தின் பூமிக்கடியில் உள்ள பழைய மழைநீர் வடிகால்வாய் (ஆர்ச் கால்வாய்) கட்டமைப்புகளை சேதப்படுத்தாவண்ணம் அல்லது புதியதாக மழைநீர் வடிகால்வாய் (ஆர்ச் கால்வாய்) கட்டமைப்புகளை அமைக்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு) நவீன முறையில் பெருநகர சென்னை வளர்ச்சிக்குழுமம் மூலம் புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டி பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும்,
3. **சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண்.23**: மண்டலம்-5, வார்டு-*53*, சர்வே எண்,2, உட்பிரிவு -*14*, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பால் பண்ணை அமைந்துள்ள 0.35 ஏக்கர் இடத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ள நிலத்தில் 150 எண்ணிக்கையிலான நபர்கள் வசிக்கும் குடியிருப்புகளை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு மாற்று இடம் வழங்கப்பட்ட பின்னர் அவ்விடத்தில் பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியினை

மேற்கொள்ளவும், பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் புதிதாக கட்டப்படும் விளையாட்டு மைதானத்தை மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கவும்,

4. **<u>சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 24</u>**: மண்டலம்-5, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மாடல் ஸ்கூல் அமைந்துள்ள 14 ஏர்ஸ் மற்றும் 930 ச.மீ நிலப்பரப்பில் காலியாக உள்ள நிலம் 22.30 மீட்டர் அகலமும் 33.80 மீட்டர் நீளமும் கொண்டதாகும். இரத்த சுத்திகரிப்பு மையம் அமைக்கும்போது, காப்பகத்திற்கும், சுத்திகரிப்பு மையத்திற்கும் நடந்து செல்ல பாதைக்கு இடம் ஒதுக்கி விட்டு மீதமுள்ள இடத்தில் இரத்த சுத்திகரிப்பு மையம் அமைக்கலாம். 0.20 ஏக்கரில் பெருநகர வளர்ச்சிக்குழுமம் மூலம் புதிதாக இரத்த சுத்திகரிப்பு மையம் கட்டி பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும்,
5. **<u>சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 25</u>**: மண்டலம்-10, வார்டு-*140*, மேட்டுப்பாளையம் சாலை, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை – *15 Old S.No.241 T.S.No.62 part, T.S.No.62/8, Block No.93, 6,656.64 Sq.Mts.* சர்கார் புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ள அம்மா பூங்காவினை மேம்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும்,
6. **<u>சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 29</u>**: மண்டலம்-10, வார்டு-*136*, *P.T.*ராஜன் சாலை, கே.கே.நகர், சென்னை – 78ல், *Old S.No.394/1 part T.S.No.200, Block No.0137, 11054 Sq.Mts.* ரயத்துவாரி நிலத்தில் அமைந்துள்ள சிவன் பூங்காவை மேம்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும்,
7. **<u>சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 26</u>**: மண்டலம்-9 சென்னை மயிலாப்பூர், லஸ் அவென்யுவில், நிரந்தர நிலப்பதிவேட்டின் படி கட்டிடம் 731.25 ச.மீ (7868.25 ச,அடி) பிளாக் எண்.71, நகர நில அளவை எண்.3573/13, மயிலாப்பூர் கிராமம், சென்னை மாவட்டம் அடங்கலில் மாநகராட்சி தனி வகைப்பாடு கொண்ட நிலத்தில் அமைந்துள்ள சிதிலமடைந்த பெருநகர சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூட கட்டிடத்தை மேம்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும்,
8. **<u>சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 31</u>**: மண்டலம்-12, வார்டு-*163*, ஆதம்பாக்கம் பால கிருஷ்ணா தெருவில் *Old.S.No.184/15 T.S.No.4 ward (G) 0.58* ஏக்கர்ஸ் அரசு புறம்போக்கு வகைப்பாடு கொண்ட நிலத்தில் உள்ள சிதிலமடைந்த பழைய சமூக நலக்கூட கட்டிடத்தினை மேம்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும்,
9. **<u>சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு எண். 37</u>**: மண்டலம்-*1*, வார்டு-*11*, சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், திருவொற்றியூர் வார்டு – *027 (Ward – H), Block* – 0024, தெற்கு மாடவீதி *(S.F.No.47/1)* இல் 2885 ச.மீ பரப்பில் புதிய சமுதாய நல கூடம் கட்டப்படவுள்ள கட்டிடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கவும்,

<u>**நிபந்தனைகள்:**</u>

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இந்நிலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தினரால் கட்டிடம் கட்டி முடித்த பின்பு தொடர் பராமரிப்பிற்காக பெருநகர சென்னை மாநகராட்சி வசம் கட்டிடத்தை ஒப்படைக்க வேண்டும்.
2. இந்நிலம் எக்காரணம் கொண்டும் எதிர் காலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படாது.
3. இந்நிலம் எத்தகைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படுகிறதோ அத்தகைய பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்தப்படவேண்டும்.
4. முன்நுழைவு அனுமதி அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.

மேற்கண்ட இனங்களுக்கான பணிகளை மேற்கொள்ள நிபந்தனைகளுடன் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்திற்கு உள் நுழைவு அனுமதி வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.170/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.துநக.எ.ண்.எல்.இ.1 / 1976 / 2024**

**ஆணையர் (பொ) அவர்களின் 26.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:384 / 2024** **பொருள் எண்.65**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை -- மண்டலம்-9, பகுதி-24, வார்டு-110ல் அமைந்துள்ள காம்தார் நகர் மெயின் ரோடு என்ற சாலைக்கு எஸ். பி. பாலசுப்பிரமணியம் சாலை என பெயர் சூட்ட மன்றத்தின் அனுமதி.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 25.09.2024 நாளிட்ட அறிவிப்பில் பல்வேறு மொழிகளில் *40* ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, தன்னுடைய அமுதக் குரலால் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக இசை மழை பொழிந்ததோடு, பல படங்களுக்கு இசையமைத்தும், திரைப்படங்களில் நடித்தும், பல்துறை வித்தகராக விளங்கியவரும், ஒன்றிய அரசின் பத்மஸ்ரீ, பத்மவிபூஷன் விருதுகள் பெற்ற வரும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பிற்குரியவருமான எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அவர்கள், கடந்த *25-9-2020* அன்று இதே நாளன்று நம்மை விட்டுப் பிரிந்தார். காலம் அவரைப் பிரித்தாலும், நம் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பெற்றவர் அவர். அன்னார் தமிழ்த் திரையுலகிற்கு ஆற்றிய சேவையைப் போற்றும் வகையிலும், அவரின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையிலும், அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம் காம்தார் நகர் மெயின் ரோட்டிற்கு "எஸ்.பி. பாலசுப்பிரமணியம் சாலை" எனப் பெயரிடப்படும் என அறிவித்துள்ளார்.

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களின் *25.09.2024* நாளிட்ட கடிதத்தில் மண்டலம்-9, பகுதி-24, வார்டு-110ல் அமைந்துள்ள காம்தார் நகர் மெயின் ரோடு, கதவு எண்.41 ஆராதய கட்டிடத்தில் காலம் சென்ற எஸ். பி. பாலசுப்பிரமணியம் வசித்து வந்துள்ளார் என்றும், காம்தார் நகர் பகுதியில் காம்தார் நகர் மெயின் ரோடு, காம்தார் நகர் முதல் தெரு, காம்தார் நகர் 2வது தெரு மற்றும் காம்தார் நகர் மூன்றாவது தெரு என்ற நான்கு தெருக்கள் உள்ளது என்றும், காம்தார் நகர் மெயின் ரோட்டில் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் வசித்து வந்துள்ளதால் அவரது குடும்பத்தினரின் கோரிக்கையை ஏற்று காம்தார் நகர் மெயின் ரோடு என்ற சாலைக்கு எஸ். பி. பாலசுப்பிரமணியம் சாலை என பெயரிட பரிந்துரை செய்துள்ளார்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-24, வார்டு-110ல் அமைந்துள்ள காம்தார் நகர் மெயின் ரோடு என்ற சாலைக்கு எஸ். பி. பாலசுப்பிரமணியம் சாலை என பெயர் சூட்ட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.171/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>வ.து.ந.க.எண்.எஸ்.யூ.எஸ்.வி/3415-11/2023</u>**
**<u>ஆணையர் அவர்களின் 22.09.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:385/2024** **பொருள் எண்.66**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - சாலையோர வியாபாரிகளுக்கான நகர விற்பனைக் குழு கூட்டம் - விற்பனை செய்யக்கூடிய பகுதிகள் மற்றும் விற்பனை செய்யக்கூடாத பகுதிகளுக்கு நகர விற்பனைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டது - அரசிதழில் வெளியிட அரசின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>**

தமிழ்நாடு அரசு, கடந்த 2015-ல் ஒன்றிய அரசின் சட்டம் எண். 7/2014ன்படி சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் விற்பனை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காகவும் திட்டம் மற்றும் விதிகள் அமுல்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசாணை (4டி) எண்.29, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்சி2) துறை, நாள்07.08.2023-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆணையர் அவர்களின் தலைமையில், மாநகர நல அலுவலர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), காவல்துறை துணை ஆணையர்கள் (சட்டம் மற்றும் ஒழுங்கு) மற்றும் (போக்குவரத்து) ஆகிய அதிகாரிகளும், வியாபாரிகள் சங்கப் பிரதிநிதி ஒருவர், அரசு சாரா அமைப்பு மற்றும் சமூகம் சார்ந்த அமைப்பு பிரதிநிதி இருவர் மற்றும் குடியிருப்போர் நல சங்கப் பிரதிநிதி ஒருவர் மற்றும் சாலையோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் ஆறு நபர்கள் ஆகிய 15 பேர் அடங்கிய நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

நகர விற்பனை குழு தலைவர் / ஆணையர் அவர்களது தலைமையில், சாலையோர வியாபாரிகளுக்கான நகர விற்பனைக்குழுவின் கூட்டம் *06.09.2024* மற்றும் *20.09.2024* அன்று நடத்தப்பட்டது.

கடந்த *06.09.2024* அன்று நடைபெற்ற கூட்டத்தில், பின்வரும் பகுதிகள் மண்டல துணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு சாலையோர வியாபாரத்திற்கான விற்பனை செய்யும் மண்டலமாக *(Vending Zone)* அறிவிக்க நகர விற்பனைக் குழுவில் பொருள்கள் சமர்ப்பிக்கப்பட்டது.

1. மண்டலம்-*4*, வார்டு-*36 & 37*க்குட்பட்ட பகுதியில் உள்ள மகாகவி பாரதிநகர், மேற்கு நிழற்சாலை தெரு,
2. மண்டலம்-*7*, வார்டு *88* மற்றும் *90*-க்குட்பட்ட பகுதியில் பூங்காசாலை, (திருமங்கலம் மெயின்ரோடு மற்றும் சி.ட்டி.எச். ரோடு சந்திப்பு *(C.T.H.Road junction)*
3. மண்டலம்-*13*, வார்டு-*174*க்குட்பட்ட பெசன்ட் நகர் *2*-வது அவென்யூவில் *RBI* குடியிருப்பு கேட்டுக்கு எதிரில் தொடங்கி பெசன்ட்நகர் *16*-வது குறுக்குத் தெருவரை, மற்றும்
4. எழும்பூர், பாந்தியன் லேனில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து நீதிப் பேராணை மனு எண்.*23290/2018* நாள் *06.09.2024* என்ற வழக்கில் மாண்பமை உயர்நீதி மன்றம் வழங்கிய உத்தரவில், எழும்பூர், பாந்தியன் லேன் (கோ- ஆப் டெக்ஸ் ஒட்டியுள்ள பகுதி) விற்பனை செய்யக் கூடிய பகுதியாகவோ அல்லது விற்பனை செய்யக்கூடாத பகுதியாகவோ

இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்க வேண்டும் என உத்தரவிட்டதின் அடிப்படையில் நகர விற்பனைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி, பொருள்கள் நகர விற்பனைக் குழுவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நான்கு பகுதிகளும் சாலையோர வியாபாரம் செய்வதற்கான விற்பனை செய்யக்கூடிய பகுதிகளாக *(Vending Zone)* அறிவிக்கப்பட்டது.

மேலும், 20.09.2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில், மண்டலம் வாரியாக சாலையோர வியாபாரத்திற்கான விற்பனை செய்யும் மண்டலமாகவும் *(Vending Zone)* மற்றும் விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட மண்டலமாகவும் *(Non Vending Zones)* நகர விற்பனைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது. அவை நகர விற்பனைக் குழுவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:-

| மண்டலம் | வார்டு | விற்பனை செய்யக்கூடிய பகுதி | வார்டு | விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட பகுதி |
|---|---|---|---|---|
| 1 | 13 | சாத்தாங்காடு, எம்.ஜி.ஆர். ரோடு | 5 to 14 | திருவொற்றியூர் நெடுஞ்சாலை, எண்ணூர் நெடுஞ்சாலை |
| 2 | 22 | பார்த்தசாரதி ரோடு | 15, 16 & 18 | *T.P.P.* சாலை (தேசிய நெடுஞ்சாலை) |
| 3 | 27 | மில்க் காலனி மெயின் ரோடு | ------ | ------ |
| 4 | 42 | மன்னப்பன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை | 43 | கும்மாளம்மன் கோவில் தெரு, கணக்கர் தெரு |
| 6 | 75 | சின்ன பாபு தெரு, நம்மாள்வார் பேட்டை (ஒத்தவாடை தெரு முதல் சுப்பராயன் 1 முதல் 5 தெருக்கள் வரை) | 73 | குக்ஸ் ரோடு, திரு.வி.க. நகர் |
| 7 | 87 | கிழக்கு அவென்யூ சாலை | ------ | ------ |
| 8 | 95 | வில்லிவாக்கம் ஸ்டேஷன் ரோடு | ------ | ------ |
| 9 | 124 | வெங்கடேஷ் அக்ரஹாரம் | 111 & 124 | 1)காதர் நவாஸ் கான் ரோடு<br>2)வெங்கடேஷ் அக்ரஹாரம் 1வது லேன் & 2வது லேன்<br>3) சாரதாபுரம் மெயின் ரோடு<br>4) அலமேலுமங்காபுரம்<br>5) நஞ்சுண்டா ராவ் காலனி |
| 10 | 136 | *A.P.* பட்ரோ சாலை, கே.கே.நகர் | 136 | *P.T.* ராஜன் சாலை, கே.கே.நகர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 143 | முகப்பேர் மேற்கு பிரதான சாலை அம்பத்தூர் வேலம்மாள் ஹால் முதல் சென்னை ஸ்னாக்ஸ் டீ கடை வரை<br>பூங்கா முதல் GO கலர்ஸ் வரை | 144 | போலீஸ் லேன் ரோடு மதுரவாயல் |
| 12 | 164 | நங்கநல்லூர் 4வது பிரதான சாலை<br>(J/F வீரராகவன் தெரு முதல் நங்கநல்லூர் 6-வது மெயின் ரோடு வரை) | 164 | நங்கநல்லூர் முதல் பிரதான சாலை |
| 13 | 180 | வாட்டர் லேன்டு டிரைவ் 2வது தெரு<br>(திருவள்ளுவர் நகர் 3-வது அவென்யூ முதல் வாட்டர் லேன்டு 2-வது தெரு வரை) | 180 | புதிய கடற்கரை சாலை |
| 14 | 191 | செலன் எஸ்டேட் பிரதான சாலை<br>(வீராத்தம்மன் கோவில் தெரு முதல் ஜி-ஸ்கொயர் வரை)<br>(பச்சை நிறத்தில் குறிக்கப்பட்டுள்ள பகுதி) | 191 | வீராத்தம்மன் கோவில் தெரு (சிகப்பு நிறத்தில் குறிக்கப்பட்டுள்ள பகுதி) |
| 15 | 200 | செம்மஞ்சேரி TNUHDB 1-வது பிரதான சாலை<br>(நூக்கம்பாளையம் லிங்க் ரோடு சந்திப்பு முதல் TNUHDB 10-வது அவென்யூ வரை) | ----- | ------ |

சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறைப்படுத்துதல் விதிகள் *2015*, விதி எண்.*20*ன்படி மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள சாலையோர வியாபாரத்திற்கான விற்பனை செய்யும் மண்டலமாகவும் *(Vending Zone)* விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட மண்டலமாகவும் *(Non Vending Zones)* நகர விற்பனைக் குழுவினால் பரிந்துரை செய்து மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறைப்படுத்துல் சட்டம் *2014*, பிரிவு எண்.*21*-ன்படி மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள சாலையோர வியாபாரத்திற்கான விற்பனை செய்யும் மண்டலமாக வும் *(Vending Zone)* விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட மண்டலமாகவும் *(Non Vending Zones)* அரசிதழில் வெளியிட அரசின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பியதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.174/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**வதுநக.எண்.ஜி4 / 2857 /2023**

**ஆணையர் அவர்களின் 22.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:386 / 2024** **பொருள் எண்.67**

**விளம்பர பலகை - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிழற்குடைகள் (Bus shelters) (MP, MLA, Mayor, Councilor நிதியின் கீழ் கட்டப்பட்டவை), பேருந்து விரிகுடை (Bus bays), சமூக நல கூடங்கள், வணிக வளாகங்கள், தெரு விளக்கு கம்பங்கள், High mast lights, பூங்கா மற்றும் விளையாட்டு திடல்களில் உள்ள விளக்குகள் (மின் துறை மூலமாக கையாளப்படும் பேருந்து சாலைகளில் உள்ள தெரு விளக்குகள் தவிர) விளம்பரங்கள் செய்ய - அனுமதி வழங்குவது மற்றும் அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து விரிவான அறிக்கையினை தயாரித்திட ஒரு கலந்தாலோசகரை (Consultant / Consulting Service) நியமிக்க TNUIFSL நிறுவனத்தை கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

கூடுதல் தலைமை செயலாளர் / தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் *TNUIFSL* அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிழற்குடைகள், தெரு விளக்குகள், பூங்கா மற்றும் விளையாட்டு திடல் மற்றும் இதர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பர பலகைகள் அமைப்பதன் மூலம் சென்னை மாநகராட்சிக்கு வருவாய் பெருக்குவது சம்மந்தமாக அறிக்கை தயாரிக்க கலந்தாலோசகரை *(Consultant / Consulting Service)* நியமிக்குமாறு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார் என்றும், மேலும் இப்பணி *project Development Grant Fund (PDGF)* நிதியின் *Technical Assistance Sanctioning Committee (TASC)* யின் ஒப்புதல் வழங்கும் பட்சத்தில் தமிழக அரசின் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, இது சம்மந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒப்புதலும், அதற்கான மன்றத் தீர்மானம் கோரப்பட்டது.. மேலும், இப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு விவரங்கள் கோரப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு எண்-*117-S* மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 விதி எண்.328-ல், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பரங்களை மேற்கொள்ளும் வகையில் வழிவகையினை ஏற்படுத்திக் கொள்ளவும், இவ்விடங்களில் விளம்பரங்கள் செய்ய, கட்டணத்தினை வசூலித்துக்கொண்டு அனுமதி வழங்கிடவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், கூடுதல் தலைமை செயலாளர் / ஆணையர் அவர்களின் ஆணை பெற்று இவ்வலுவலக 15.03.2024, 15.07.2024, 26.07.2024, மற்றும் *16.09.2024* நாளிட்ட கடிதங்கள் மூலம் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு மேற்குறிப்பிட்ட அறிக்கை தயாரிக்க கலந்தாலோசகரை (*Consultant / Consulting Service)* நியமிக்க பணிகளை மேற்கொள்ளுமாறு *TNUIFSL* நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிழற்குடைகள் *(Bus shelters) (MP, MLA, Mayor, Councilor* நிதியின் கீழ் கட்டப்பட்டவை), பேருந்து விரிகுடை *(Bus*

*bays)*, சமூக நல கூடங்கள், வணிக வளாகங்கள், தெரு விளக்கு கம்பங்கள், *High mast lights*, பூங்கா மற்றும் விளையாட்டு திடல்களில் உள்ள விளக்குகள் (மின் துறை மூலமாக கையாளப்படும் பேருந்து சாலைகளில் உள்ள தெரு விளக்குகள் தவிர) ஆகியவற்றின் விவரங்கள் *TNUIFSL* நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

எனவே, மேற்குறிப்பிட்டவாறு கலந்தாலோசகரை *(Consultant / Consulting Service)* நியமனம் செய்திட பணிகளை மேற்கொள்ளுமாறு *TNUIFSL* நிறுவனத்தை கேட்டுக்கொண்டதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.175/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**வ.து.த.இ.ந.க.எண்.எம்1 / 6223 / 2024**

**ஆணையர் அவர்களின் 26.09.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:387 / 2024** **பொருள் எண்.68**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை -ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள உபயோகமற்ற காலி நிலம் வணிக பயன்பாட்டிற்காக உரிமம் அடிப்படையில் வழங்க இ-டெண்டர் மற்றும் ஏலம் கோரியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி தன் சுய வருவாயை பெருக்க பல்வேறு யுத்திகள் கையாளப்பட்டு வருகின்றது.. சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் பல இடங்களில் வணிக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது போல் பெருநகர சென்னை மாநகராட்சியில் இதனை நடைமுறைப்படுத்தலாம் என ஆலோசனை செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9 வார்டு-123, ராஜா அண்ணாமலைபுரம் 4வது தெருவில் உள்ள 938.16 சதுர அடி கண்டறியப்பட்டு முதல் கட்டமாக உபயோகமற்ற காலியிடத்தை வணிக பயன்பாட்டிற்காக உரிமம் அடிப்படையில் வழங்கலாம் என முடிவு செய்து, சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறார்கள் என்று கண்டறியப்பட்டது போல் சென்னை மாநகராட்சியும் செயல்முறைபடுத்தவுள்ளது.

இதனை தொடர்ந்து அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் 06.09.2024 நாளிட்ட கடிதத்தில் வணிக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படாதகாலி நிலத்தினை உரிமம் அடிப்படையில் வழங்குவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள து.

மேலும், 13.09.2024 அன்று ஒப்பந்தம் மற்றும் ஏலம் என்ற அடிப்படையில் கோர பதிவேற்றம் செய்யப்பட்டது. ஒப்பந்தம் அளிக்க கடைசி நாளாக 26.09.2024 அன்று மாலை 3.00 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. 27.09.2024 அன்று மாலை 3.00 மணியளவில் ஒப்பந்தம் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதன் வாயிலாக தெரிவிப்பது யாதெனில், பெருநகர சென்னை மாநகராட்சி நிலம் மட்டும் வழங்கும் நிலையில், ஒப்பந்ததாரர், தற்காலிக கூரை (கீழ்தளம் மட்டும்) அமைத்துக் கொள்ளலாம்.

இவ்வொப்பந்தத்தில் ஒரு மாத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.50/- வீதம் குறைந்த பட்ச உரிமக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. இதனடிப்படையில் 938.16 சதுர அடி *X* குறைந்த விலைப்புள்ளி ரூ.50/- வீதம் மாதத்திற்கு ரூ.46,908/-என குறைந்த பட்ச உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. இதற்கு தகுதிகள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| Eligibility Criteria | Documents required to substantiate |
|---|---|
| The bidder shall be<br>a) A proprietorship form,<br>b) A partnership firm registered under the Indian Partnership Act 1932.<br>c) Limited Liability Partnership<br>d) One person Company (OPC)<br>e) A Company incorporated under the Companies Act, 1956/2013.<br>f) Should be in existence on or before last date of submission of the bid. | 1. Registration certification of the firm<br>2. Partnership deed<br>3. Certificate of incorporation<br>4. PAN Registration copy<br>5. Articles & Association & Memorandum of Association, GST Registration copy. |

இவ்வொப்பந்தம் மற்றும் ஏலத்தில் பங்கு பெறுவோர் அதிகபட்சமாக ஒப்பந்தபுள்ளி கோரியவரை தொடர்ந்து, அவ்வொப்பந்தத்தில் பங்கு பெறுவோர் மட்டுமே கலந்து கொண்டு ஏலம் விடப்படும். அந்த ஏலத்தில் யார் அதிகபட்சம் ஏலம் கேட்கிறார்களோ அவர்கள் தகுதியுடைய ஒப்பந்ததாரராக கருதப்படுவார்.

எனவே, மண்டலம்-9, வார்டு-123 ராஜா அண்ணாமலைபுரம் 4வது தெருவில் உள்ள உபயோகமற்ற காலி நிலம் 938.16 சதுர அடி அவசர அவசியம் கருதி உரிமம் அடிப்படையில் காலி நிலத்தில் தற்காலிக கூரை (தரைதளம்) அமைத்து மூன்று வருடங்களுக்கு ( மேலும் மூன்று வருடங்களுக்கு 15% உயர்வு என்ற அடிப்படையில் ) ஒப்பந்த ஆவணங்களின் அடிப்படையில் இ-டெண்டர் மற்றும் ஏலம் கோரியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 23.09.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2024 அன்று தீர்மான எண்.169/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

******